இதன் முதலில் 'வாக்குண்டம்' எழுதிய ஏடொன்றுளது. இதில் இரும்பீயம், சாரக்கட்டு, அயச்செம்பு, கிண்ணி, களங்கம், ரசமணி, அஞ்சனம், மைவகை, காந்தம், செந்தூரம், தாளகம், செந்தூரம், இரும்பிலீயம், ரசக்கட்டு, அயத்திலீயம், இரும்பு செம்பு, சூதபற்பம், சூதக்கட்டு செந்தூரம், முதலியன உள்ளன.

—❀—

வரிசை எண்: 1327 சுவடி எண்: 676 (உ)

## காலாங்கியார் தேவி பூசாவிதி

ஏடுகள்: 23. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு: 5—6 வரிகள். கி. எண்ணிக்கை: 600.
அளவு: $23\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: காலாங்கி முனிவர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

ஓமென்ற கணபதியும் வல்லபையுங் காப்பு
ஓங்காரக் கம்பநுணி சோதி காப்பு
ஆமென்றும் ஊமென்றும் அடங்கி நின்ற
ஆதியந்த மெய்நிறைந்த பராபரமே காப்பு.

**முடிவு:**

சேறப்பா நாதமதில் அமறி உப்பு
சேர்ந்திடவே நாதமங்கே தெளியும் யாரு
ஆறப்பா அறிவார்கள் தெளிவைக் காணார்
அத்தெளிவை அறியாமல் உலகத் துள்ளே
பாறப்பா நாதமதை வாங்கி மைந்தா
பாசமதை அகத்தாமல் பாவிமார்கள்
நே.............. 52

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

**முதல் முகப்பு ஏட்டில் ''வேணியான் சதாசிவத்தில்'' எனத் தொடங்கும் செய்யுட்கள் 2 எழுதப்பட்டுள்ளன.**

**இதில், காலாங்கியார் அஷ்டகர்மம், வித்துவேஷணம் முதலியன உள்ளன.**

---

வரிசை எண் : 1328. சுவடி எண் : 676 (b)

# அகத்தியர் வைத்தியம்-80

ஏடுகள் : 15. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு : 23½ × 2½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

சீரணி கொன்றை சூடும்
சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம்
வணங்கிநூற் றன்ப துந்தான்
பூரணி வாலை ஞான
சரசுவதி பாதம் பேர்ற்றி
காரண மான செஞ்சொற்
கற்மசூஸ்த் திறந்தான் காப்பே. 1

**முடிவு:**

மெய்யடா நயவசிம மோகனம தாகும்
(விள்)ளாதே பேதனமாம், நயவசிம வென்று
நய்யவே வயநமசி வித்துவே ஷிக்கும்
நாடாதே மாரணத்தின் மசிவயந வென்றே. (85)

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

**இது, எமது சுவடி எண் 324 (b)/D. 637 அகத்தியர் வைத்தியம் 150 போன்றது. ஆனல் இது, அகத்தியர் வைத்தியம் 80 எனக் கொண்டு உள்ளது.**

இதில் 'நீலகண்டம்' என்ற தலைப்பு மட்டும் உள்ளது. இதில் பஞ்சாட்சர விளக்கம் அஷ்ட்டகர்மத்திற்கும் கூறப்படுகிறது சிறப்பு.

---

வரிசை எண் : 1329. சுவடி எண் : 677

## வைத்தியம்

ஏடுகள்: 25. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 350.
அளவு : $23\frac{1}{2} \times 2$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

கடிக்கொல்லும் வறசமந் தானுற்பத்தி
தானும் வந்திடும் வறுமை....
மகலும் தான் நிறவா மூடற் சமைத்த
பின்தானும் தானே. 5

**முடிவு :**

ஓமம் சாதிக்காய் கிராம்பினோடு தோ....
குரோசாணி பலமே' தூக்கி
காணவே பொடி.....போகுதன்னில் 131
பாகுநிலந்....நெயி நாழி....

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது, மிகவும் செல்லரித்துள்ளதாலும் தொடக்கம் முடிவு இல்லாததாலும் இதுபற்றி குறிப்பெழுத இயலவில்லை.

---

வரிசை எண் : 1330. சுவடி எண் : 678 (a)

# கும்பமுனி-1200

ஏடுகள்: 20. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 9—10 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு : 25 × 4 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : கும்பமுனி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

(பிள்ளை)யா ரெழுத்தென்றும் சுளிமீ தென்றும்
பேர்பெரிய நாதாக்கள் . . . . யென்றும்
(வெள்)ளையா யிருந்துவெட்ட வெளிதா னென்றும்
மலரடி மலரென்றும் தாய்தா னென்றும்
நுள்ளுபரஞ் சோதியென்று மதியீ தென்றும்
மயங்கியபூ ரணமென்று மருந்தீ தென்றும்
உள்ளதா யெங்கெங்கு நிறைந்த தென்றும்
உதித்தறீங் காரமுத லெழுத்தீ தென்னே. 1

**முடிவு :**

தானென்ற ஆணுவத்தைத் தீத்துப் போடு
சங்கற்ப விகற்பமெல்லாந் தானே தள்ளு
கோனென்ற தத்துவத்தைக் குறித்துப் பாரு
கூசாமல் மவுனத்தில் குவிந்தே நில்லு
கானென்ற ஞானத்தீ மூட்டிப் பாரு
கனத்தநல முள்ளதொரு ராசி சேரு
வானென்ற வொளிவெளியைக் கண்டு தேறு
மாச்சற்ற குருபதத்தில் வணங்கி நில்லே. 104

முற்றும்.

**காலம் :**

யுவ வருடம் சித்திரை மாதம் 23-ந் தேதி சுப்பிரமணிய வாத்தியார் குமரன் எழுதி நிறைந்தது.

குருசாமி சகாயம்.

**குறிப்பு:**

இதில், பாடல்கள் 104 உள்ளன. இதில் சிவதீட்சை, கருமானம் மரைப்பு மை, அஞ்சன மை, புவனைத் தயிலம், வஸ்த்து வித்தை, ஸ்ரீவசியம், தம்பனக் குளிகை, அருணகுளிகை, அஞ்சனக் குளிகை. இந்திரஜாலக் குளிகை, கவனக் குளிகை, சவுக்காரச் சுன்னம் முதலியன உள்ளன.

---

**வரிசை எண் :** 1331. சுவடி எண் : 678 (b)

# இந்திரசாலம் 3-ம் காண்டம் கக்கிசப் படலம்

ஏடுகள்: 29. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 12—13 வரிகள். கி. எண்ணிக்கை : 1200.
அளவு : 25 × 4 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக் கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

காரணமெய்ஞ் ஞானவெளி கடந்து நின்ற
கற்பகமே விற்பனமே கருணை மேவு
பூரணமே பஞ்சகர்த்தா ரூபி யான
புண்ணியமே நிண்ணயமே பொருளே வேத

**முடிவு :**

பாடியபோ தவரவரே தெரிந்து நாத்த
பரிபாஷை யரிந்துரைத்த பராபரத்துக் கோநீ
தேடியநூ லிதுமட்டு முனக்குப் போதும்
தேவையில்லை மற்றநூல்த் தொடவே வேண்டாம்
மோடிசெய்ய வகையினிமேல் மாந்த ரீகம்
முன்னூறு கடசியிலே நாலா.. 301

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் ரசகுளிகை, நாமகள் பூமகள் கிணேசன் பூசை, சிதம்பர பூசை, மேரு பூசை, ஏகாட்சரம், மோடிச்சந்தா பூச்சணி, அட்டதுர்க்கை,

அட்ட மூலி, பச்சனிக் கரு, உச்சாடினம், துவாலேயெடுக்க, வாடை, மரங்கொத்திக்காடை, கெருடன்கடு, கருங்குரங்கு, சுணங்கு, பச்சணி, தண்டகம், முதலியன் உள்ளன. இதன் கடைசி ஏடு இல்லே.

---

**வரிசை எண்:** *1332* சுவடி எண்: *678(c)*

# வைத்தியம்—மந்திரம்

ஏடுகள்: 12. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது.
பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை: 250.
அளவு: 25 × 4 சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: அறியக்கூடவில்லே. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

*ரு—ரா ரா ரா ரா அம் அம் டும் டும்*
*அரி அரி யென்ருேது காவல்விட*
*வயிரவதி காந்தியென்று கட்டுரைக்க*
*ஓங்கார மிட்டிட் டோதே.* 5

**முடிவு:**

*பாச்சலி லேட்டேனப் பன்றி———சலில்*
*வாச்சது பொன்குரு மந்தருேரோறையில்*
*மூச்சது முட்டி————படி*
*வாச்சது சித்தி வகுத்துரைப் பேனே.* 176
*வகுத்தது வெள்ளியில் வருமட்ட கறமும்*
*பகுத்———————*

**காலம்:**

இல்லை.

**குறிப்பு:**

இதில், மாந்திரீகம் மிகுதியாயுள்ளது.

---

வரிசை எண் : 1333 சுவடிஎண் : 679

# சுப்பிரமணியர் அகத்தியருக்குச் சொல்லிய ஆணி முறை

ஏடுகள் : 75. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 4-9 வரிகள். கி. எண்ணிக்கை : 1500.
அளவு : 22½ × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : சுப்பிரமணியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

கண்ணுதலோன் பெற்ற கணபதியை யான்வணங்கி
மண்ணிலுள்ளோர்————யெண்ணரிய
பொன்னுணி கொத்தை புகழ்ந்துரைப்போன் பூதலத்தில்
யென்னுளும் மேலே————

**முடிவு:**

முழுகையிலே சூடெல்லாம் தணிந்து போகும்
முன்னிலயாய் கண்ணெரிவு குளிர்ச்சி யாகும்
பழுக்காது திரேகமது பொன்போல் மின்னும்
பண்பான நீர்க்கடுப்பு வெள்ளை தீரும்
அழுகாது விந்துவங்கே இருகும் பாரு
அப்பான மூலத்தில் சூடு போகும்
நழுக(வே) சூலையுட கருணை வாங்கும்
நலமான போகருட கடாட்சந் தானே.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், கெவுளி சாத்திரம், மருந்தீட்டுக்கு, குளிர்தாமரைத் தயிலம், கண்சிவக்குறது முதலானதற்கு எண்ணெய், சருவாங்கி வாதத்துக்கு, பெரும்பாட்டுக்கு வாலைரசம் முதலியன உள்ளன.

இதில், வெவ்வேறு ஏடுகள், வெவ்வேறு எழுத்துக்களில் உள்ளன.

**வரிசை எண் :** 1334 சுவடி எண் : 680 (a)

# அகத்தியர் சகல கலைக்கியானம் 1200க்குச் சுருக்கம்–120

**ஏடுகள் :** 37. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
**பக்கத்திற்கு :** 8-9 வரிகள். கி . எண்ணிக்கை: 700.
**அளவு :** 18 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
**ஆசிரியர்:** அகத்தியர். முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம்:**

......கும் பூரண ......கச்
செகத்திலே வானீர் விட்டு மத்தித்துத்
துரகிடில் கணெ.........ஊர்க்குருவி
புடத்தைப் போட்டு சமத்தாக...........தே. 7

**முடிவு:**

திறந்ததொருத் தமர்வாசல்க் குள்ளே நீயுஞ்
செலுத்தடவார் சினைதனை ரவியில் மைந்தா
பரந்ததொரு வாசியது பதிவு மாகும்
பதிவான தீபவொளி கண்ணில் காணும்
கரந்ததொரு பால்போலே அமுற்த மூறுங்
கருவான அமுற்தத்தைத் தினமுங் கொள்ளு
சிறந்ததொரு பூரணத்தைத் தினமுங் கொண்டு
சிவமான மவுனமதில் சேர்வாய் முத்தே. 120

அகத்திய மாமுனி யருளிச் செய்த சகல கலை ஞானம்
ஆயிரத்திரு நூறுக்கு சுருக்கம் 120
எழுதி முகிந்தது முற்றும்
குழந்தை ஆனந்தா பாதம் துணை

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், கற்பங்கொள்ளுகிறவர்கள், வீரமெழுகு, கெந்தகத்தயில ஊதியந்த தயிலம், அண்டவித்து, மாரணவசியம், கற்பூரவைப்பு,

மெழுகு, பாசாணக்கட்டு, உருவகைக்கரு விபரம், தவசுபண்ணத் தயிலம், அஷ்டசித்து கரு, அய்ங்கோலத் தயிலத்தில் விநோதம், ஆதியந்தம் கோஷ பீஷம், முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1335. சுவடி எண் : 680 (b)

## அகத்தியர் ஞானம்-12

ஏடுகள்: 5 (39—43). ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 75. அளவு : 18 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

காணப்பா கிஷமுகனைப் பணிந்து போத்தி
கடந்துநின்ற மூலவன்னிக் கப்பால் நின்ற
பூரணமா மனோன்மணித்தாய் பதமும் போத்தி
புகழான வேதாந்த சுருக்கஞ் சொல்வேன்.

**முடிவு :**

குறையாமல் லுன்னைப்போல் (சி)வப்பு மாகும்
கூறரிய நவலோகம் ஹூத்துக் கொன்று
நிறையோடே நின்றவர்க்கு யெல்லாஞ் சித்தி
நேராகப் பன்னிரண்டு பாட்டு முத்தே. 12

தெஷ்சணாமூர்த்தி பாதமே கெதி
குளந்தை ஆனந்தா லட்சிக்க
சிந்தாமணி துணை

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், தம்பனக் குளிகை என்ற தலைப்பு மட்டும் காணப்படுகிறது. ஈற்றில் 'குழந்தை ஆனந்தா' பேசப்படுவதால் இது, எழுதியவருடைய குருவாக இருக்கலாம்.

---

வரிசை எண் : 1336 சுவடி எண் : 680 (c)

## மச்சமுனி எண்ணூற்றில் தெளிவு

ஏடுகள்: 22(44–65) ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு : 18 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : மச்சமுனி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆகத்தால் கெவுரிவெள்ளை வீரந் (தா)ர
மப்படியே அமுரிஅரைப் பொன்று பின்றும்
போகத்தான் குமரஅரைப் பொன்று பின்று
வஷ்த்துப்பூட் டியரைகாட்சியிலே தேன்விட் டப்பா

**முடிவு :**

ஞாலான சட்டைமுனி ஞானம் பாரு
னுகருவாய்த் தேவர்அமுர்த மாகு மப்பா
காலான வளியிதுதான் வாமத் தோற்கு
கள்ளேது குடித்ததனுல் வெறியுண் டாமே. 44●

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், சன்னி மாத்திரை, வாகைமேல் புல்லுருவி, ஆலின்மேல் புல்லுருவி மை, அருகம்புல் மூலி, கெந்தகத் தய்லம் முதலியன உள்ளன.

இது, சட்டைமுனி 800–லிருந்து சிறந்த பாடல்களைக் கொண்டு உள்ளது.

---

வரிசை எண் : 1337. சுவடி எண் : 680 (d)

## சட்டைமுனி பட்சணியில் தெளிவு

ஏடுகள்: 3 (66—68). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 6—8 வரிகள். கி. எண்ணிக்கை : 40.

அளவு : 18 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : சட்டைமுனி. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

. . . . . . . . . . .மெள்ளக் கண்டு
வெகுகோடி சித்தர்தவஞ் செய்தார் பாரே
மாருத பேரொளியே சொற்கஞ் சொற்கம்
மதியான பூரணமே சத்தி யாளுள்
கூருத கற்பமடா—குமரி கற்பங்
கூரறிந்து கொண்டவனே சித்தன் சித்தன்
நேருக நின்றவனே அருளைக் காண்பான்
நின்ற நிலை தப்பிவிட்டா லொன்றுமில்லை யென்னே. 28

**முடிவு :**

காணுமே விந்து கயிலைப் பதிதனில்
தோணுமே ஞதஞ் சுருதி முடிந்திடம்
பேணுவாள் சத்தி பிற்படில் பன்றியே
ஊணும தாகு உயிரரு வாசியே, 48

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதுவும், சட்டமுனி பட்சணியிலிருந்து சிறந்த பாடல்களைக் கொண்டது.

———※———

வரிசை எண் : 1338. சுவடி எண் : 681

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 166. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 4—5 வரிகள். கி. எண்ணிக்கை : 3500.
அளவு : 44 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

அன்னமே கோழி ஒணுன்
மயிலென நடக்கும் வாதம்
பின்னேஓர் ஆமை அட்டை
பெருத்திட லடித்த மாகும்
சொன்னதோர் தவளே பாம்பு
சுத்திய அய்ய தென்று
அன்னமே நடையே கேளாய்
அமந்ததோர் நாடி தானே. 1

முடிவு:

சகாதேவி என்ருல் கற்றைக்காம்புயிலே
நருவலி யென்ருல் வெட்டிவேர்
சகினியாவது சிறுக்கீரை
முறியாவது கொழுந்தி
ரெத்தக் கழிச்சலுக்கு மாம்பட்டெ கெஷ்யம்.

காலம்:

இல்லே

குறிப்பு:

இதில், மூணு நாளே மாறலுக்கு, சிலேத்தும சுரத்துக்கு பாட்டு, விஷ சுரத்துக்கு பாட்டு, சிலேத்தும வாதசுரத்துக்கு, அஸ்த்தியில் சுரம், அசாத்திய சுரம், அசாத்திய சன்னி லட்சணம், தேளுக்கு, கண் நோவுக்கு, மருந்தீட்டுக்கு முதலியன உள்ளன.

இடையிடையே மந்திரங்களும் சக்கரங்ளும் உள்ளன. ஏடுகள் ஒடிந்துள்ளன. 21-வது ஏடு 18 என்றுளது 29வது ஏடு 2 உள்ளது. 37க்கு பிறகு 33 தொடக்கம். 60–ல் 2 ஏடுகள் உள்ளன. ஏடுகள் சரியில்லே.

---

வரிசை எண்: 1339. சுவடி எண்: 682 (a)

# நீலகண்ட வாலே

ஏடுகள்: 10. ஏட்டின் நிலேமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 4 வரிகள். கி. எண்ணிக்கை: 80. அளவு: $22\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கடவில்லே, முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதியில் வுற்றுமையாள் தன்னுடனே
அன்பாய் அருளிச் சொல்ல
வேதமுனிக்......ான நனதி
சாதிலிங்கம் நூத்திருபது களஞ்சித்தானேடுத்து

**முடிவு :**

அஞ்சுவகை மக்க மெடுத்து பின்னும் நேற்ந்து
பொடியாக்கி யதில் வெருகடியுஞ் சேர்த்து
நிரையாக பசுவின் வெண்ணை யனுபானந் தன்னிலேயே
காற்க தனி... ...தனக்கேழுநாள் குடுக்க
. . ... யாகத் திகுறது காசினி....யே.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், நீலகண்ட வாலை செய்முறையும், பூசிக்கும் முறையும், பயன்படுத்தும் முறையும் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1340. சுவடி எண் : 682 (b)

# வைத்தியம் வசனம்

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 4 வரிகள். கி. எண்ணிக்கை : 30. அளவு : $22\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

மல் கட்டிஞல் கடுக்காய் பிஞ்சி கொண்டுவந்து
கொட்டையை எடுத்துப்போட்டு......
னேக அரைத்து உள்ளுக்குக் குடுக்கவும்
பேதியாகும்.

முடிவு :

மாத்திரைபண்ணி நிழலில் உலத்தவும் இருமல், செயம், காசம் யீளை யிதுகள் தீரும் பத்தியம் இல்லை.

தாளக மாத்திரை

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், மலம் சலம் கட்டினுல் அதற்குப் பத்து, புங்கன் எண்ணை தும்மட்டிக்காய் மொழுக்கு முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1341. சுவடி எண் : 683

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 125. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 2000.
அளவு : 23 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

**இதுவும் ஒருவகை கூழ்ப்பாண்ட லேகியம்**

கொள்ளவே கூழ்ப்பாண்ட லேகி யந்தான்
குணமான கூழ்ப்பாண்ட......ஞலு
விள்ளவே தாழையுட விழுதின் சாறு
விருதான........ன்னம் பூவொன்று

முடிவு:

பிறமியெலே சுறுமொளகு யிதுகள்
கியாழ வத்து ஒரு மாத்தி......
அரை ஆழாக்கு கியாழம் கொடுக்க
சகல வாயுவும் விடும்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், வருமுள்ளித் தயிலம், கீழாநெல்லித் தயிலம், கொடிமாதளை லேகியம், தேரை நெய், முள்ளங்கி லேகியம், பேயன்வாழைப்பழ லேகியம், அசுவகெந்தித் தயிலம், பேதிஎண்ணெய், லிங்கபஸ்பம், சுவாச காசங்களுக்கு கியாழம், தேங்கா நெய், குன்மத்துக்கு அப்பளாக் காரக் கியாழம் முதலியன உள்ளன.

இடையிடையே ஏடுகள் இல்லை.

---

வரிசை எண்: 1342 சுவடி எண்: 684.

## வாலை பூசை

ஏடுகள்: 18(2-19). ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். கி. எண்ணிக்கை: 500. அளவு: $23\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

காரப்பா பூசைவிதி போகனுதர் பாடினார்
சக்கரமொன் றுரெளித்து வைத்தார்
ஆரப்பா எனைப்போலே சொல்லப் போரார்
ஆச்சரிய மாச்சரியம் ஆயி ஆட்டு
சீரப்பா பூசைமடம் முழந்தா னஞ்சு
. . . . . . . . . . . . . . . . . . . .
கம்மென்ற தூபங்கள் காட்டி மேலே. 6

**முடிவு:**

கோடிவித்தை தொந்தங்கள் செய்ய வென்றால்
கூறினேன் பூனீரை வாரிக் கொண்டு
ஆடிவித்தை உத்தம தாளிச் சாத்தில்
அரைத்துருட்டி வில்லைதட்டி புடத்தைப் போடு
வாடிநீ திரியாதே அஞ்சுதர மானல்
மகத்தான சுண்ணமாறு . . . . . . . . 87

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது, அகத்தியர் பூசாவிதி-200 போல் உள்ளது. தொடக்கமும் முடிவும் இல்லாததால் அறியக்கூடவில்லை. முதல் ஏடு இல்லை.

இதில், லிங்கஞ்சுருக்கித்தயிலம், சகல சரக்குக்கட்டு, வெள்வங்க பற்பம், நாகச் செந்தூரம், ஏக மூலிகைக்கு செயநீர், லிங்கசுத்தி, சாரக் கட்டு, ஏக மூலிகை, உப்பு நீறு, நாகபற்பம், துரிசு வெள்ளை முதலியன உள்ளன.

---

**வரிசை எண் : 1343** **சுவடி எண் : 685**

# திருமந்திரம்--நிமிளைக் கட்டு

ஏடுகள் : 8. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 150.
அளவு : 23 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : திருமூலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

மேனி யெருக்கு உளுரு நுணச்சாறு
வாணிய தாம்புலம் வழங்கிய வெங்காரங்
காணிய மத்தை காய்கஸருஞ் சுராபானம்
தாணிப் பழச்சாறுச் சுருக்கிடே. 1

**முடிவு :**

சீலைமண்செய்து பத்தெருவில் புடம்போடவும்
நாகம் முழுவலிவு வேரு—காரீயம் பலம்—1
உருகுமுகத்தில் அம்பிரகச் சத்து விராகனெடை—1
ரசம் விராகனெடை— 1 வெடியுப்பு விராகனெடை ½ கூட்டி
அரைத்துக் குடுத்து, அதுக்குமேல்ச் சாரம் பலம்—1
கிளிஞ்சிப் பொடி பலம்— 1 கூட்டி......

**காலம் :**

இல்லை

குறிப்பு :

இது மை பூசப்படாத சுவடி. இதில் நிமிளைக்கட்டு, என்ற தலைப்பு இருக்கிறது. இது உரையுடன் இருக்கிறது.

---

வரிசை எண் : 1344. சுவடி எண் : 686

## திருமூலர் சூத்திரம்--30

ஏடுகள்: 7. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 150.
அளவு : $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : திருமூலர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஞட்டினி லய்ந்தும் நயம்பட ஓர்ந்துங்
காட்டினி மூண்டுங் கண்டு தெளிந்து
வீட்டினில் ரெண்டும் வெளியினில் ஒன்றும்
கூட்டி முடிக்கக் குருபற்ப மாமே. 1

**முடிவு:**

பொடியாஞ் செந்தூரம் புகைபட் டிடமெல்லாம்
கடையான காயம் கனபேதி பேதிக்கு
மடையான துத்த மகாமேரு தாயிடும்
கடையான காயம் கனகம தாமே. 31

திருமூல நாயனார் அருளிச் செய்த
சூத்திரம் 30 முடிந்தது. முத்தும்
சீனிவாசன்.

(இதன் பின்னர்)

சந்திர னுப்பு சதாசிவன் பெண்டி
அந்த முளறி அகத்துமனே யான
..........சோறும் பகர்ந்தோமே.
ஸ்ரீராமசெயம் நன்றாக. (எனப்பாதி ஏட்டிலும்)

(பின்பாதி ஏட்டில்)

வச்சிரகுகை: குட்டம் பலம் $\frac{1}{2}$ சவுட்டுமண் பலம் $\frac{1}{2}$

கெவனர் முன் 15-ல் ராமேஸ்தபர்கரை திறக்க பொன்
என முடிகிறது.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், குருபற்பம், தங்கம் வெள்ளி செயல்கள் முதலியன மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1345. சுவடி எண் : 687

# அகத்தியர் ஞானம்

ஏடுகள் : 7. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—7 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 23 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூறணத்தைப் பற்றிஅறு பதியில் லூன்றி
புகழான மூவரையில் மூவரையுங் கண்டு
காறணத்தைக் கண்ணுலே கலந்து நோக்கி
கணபதியின் பதங்கூட்டிக் கீழ்முக் கோணம்.

**முடிவு :**

கொண்டுவல்லோ அவுஷதங்கள் கொடுக்கச் சேநீ
குற்றமெல்லாந் தான்தீர்ந்து வியாதி போகும்
கொண்டுசெய்வா ரனேவோரும் சமர்த்த னென்று
தொல்லுலகில் செல்வமதாய் வாள்வார் தானே. 11

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், கருமவினை தீரவேண்டிச் செய்ய வேண்டிய சாந்தி, பூசை, ஹோமம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1346 சுவடி எண் : 688

# குழந்தைகள் வைத்தியம்

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி . எண்ணிக்கை: 200.
அளவு : 34 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

கெந்தம் விராகனிடை—2 தாளகம் விராகனிடை—2
திப்பிலி ,, 2 முளகு ,, 2
வாளம் சுத்திபண்ணினது,, .......................
........விராகனிடை 1
கொண்டுவந்து நறுக்கி ஒரு படி தண்ணீர் விட்டு

**முடிவு:**

சூழ்பெறவே குளிகை செய்து....யல் வைத்துக்கொள்ளவும்
மகிழுடன் அழிஞ்சி னேர்வாளம் வெண்குண்டிவகை
ஞலும் வித்துடன் பொன்முழுகுத் தில்லையொரு....
ருடன் அரிதாறம் னேம்..

திரித்திச்சத்தம்பலம்
(திருச்சிற்றம்பலம்)

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில் குழந்தைகள் வைத்தியம், பிள்ளைகளுக்கு கெந்தகச் செந்திரிக்க, கெந்தகத்தயிலம், தடைவிட, பிள்ளை பெறமாட்டாதவளுக்கு யெண்ணெய், ஓத கிருணிக்கு, இஞ்சிக்குழம்பு. பல வாயுவுக்கு, கடிகளுக்கு, பிசாசுக்கு கலிக்கம், மந்திரம், விநோதம் முதலியன உள்ளன. ஏடுகள் எலிகடித்தும், ஒடிந்தும் உள்ளன,

வரிசை எண் : 1347. சுவடி எண் : 689

# சத்துருமித்துரு சாத்திரம்

ஏடுகள் : 16. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 4-7 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு : $15\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கடவில்லை, முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

நன்றாக

| | | |
|---|---|---|
| சத்தி | ஆக உப்பு 3 | ஆக பூதம் 5 |
| சிவம் | கல்லுப்பு 100 | ......ம்புக |
| நடு சவுக்காரம் | வெடியுப்பு 10 | பூசிற....100 |
| அடிபூனீர் | சீனம் 10 | வெடியுப்பு |
| முடி துரிசு | பாசாணம் | கிளிஞ்சிசுன்னம் 7 |
| கல்லுப்பு | தயிர் | கல்லுப்பு 1 |

முடிவு :

நாலு சரக்கும் விராகனெடை 4 போட்டு ஏழு நாள் அரைத்து வில்லை தட்டி பழசார் பீங்கானில் விட்டு வில்லையைப் போட்டு ரவியில்..........க்க தயிலம்.

**காலம் :**

இல்லை

குறிப்பு :

இதில், யோழநிலை சரக்கு ஆதாயம், பஞ்சபதவி ......., அப்பு லோகம், புளி உப்பு, வீரபற்பம், தாளக பற்பம், கெந்தக மெழுகு, கெந்தகத் தயிலம், கெந்தக செம்பு, முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1348 சுவடிஎண் : 690 (a)

# அகத்தியர் ஞானம்--100

ஏடுகள் : 20. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 600.

அளவு : 28 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

**காப்பு**

சிந்தையுறு ஞானந் தெரி..........
...........................
பூரணியே சீர்காப்பு முத்தும்
நன்றாக குருவே துணை.

**நூல்**

பூரணமாய் மும்மூர்..........
........................
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாரும்
கர்ப்பமுண்ட ரிஷிகள்.............

**முடிவு :**

அஞ்சுமொன்றாய்க் கூட்டினால்......வாழும்
வளியோடே யிவ்வண்ண மறிந்து கொண்டு
மானிடரே காயசித்தி ஞான முற்றே
குருபாதமே கெதி.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் பதினெண்சித்தர்கள் பேர், கும்பிடு சிப்பிச் சுண்ணம், பிண்டப் பெருமை, வெள்ளைக்கல் சுண்ணம், தங்கநீறு, மணி, வாலை மூன்றெழுத்து, குருமுனிக் குருபூசை, முதலானவை கூறப்பட்டுள்ளன.

இது எமது சுவடி எண் 324 (g)/D. 642 போன்றது. மிகமிகப்பழுது பட்டு ஏடுகள் ஒடிந்துள்ள நிலையில் உள்ளன.

வரிசை எண் : 1349. சுவடி எண் : 690 (b)

# பிரம்மமுனியார் வைத்தியம்-685

ஏடுகள்: 133. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 6000.
அளவு : 28 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பிரம்மமுனி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

வக்குண்டாம்...........தமக்கு

**நூல்**

திருவளரு மெய்யான சோதி பாதம்
செப்பரிய...................
அருவுருவா யாதியந்தம் வெளியுந் தாண்டி
அகண்டுநின்ற சின்மயத்தின் பாதம் போற்றி.

**முடிவு :**

வாறுன அஞ்சினமும்................
வித்தை மாரணமும் சொன்னேன்
ஆறுன சூனியமு மவுனமொடு........
அகன்றுநின்ற கருக்கிடை சூத்திரத்தான் முற்றே. 685

**நரம்பு சிலந்திக்கு மருந்து**

கத்திரிக்காயைக் குடைந்து
........................
அகஸ்திய தண்டக்கம் வசிய மெழுதியிருக்கிறது.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் மதனவிந்தாதி லேகியம், கதலிகெந்த ரசாயனம், ரசபற்பம் தாம்புர பஸ்பம், சிவனர் வேம்புத்தயிலம், கிண்ணிக்கி வச்சிரகப்பட்டம்

காச்சல்கட்டி கெண்டைக்கு, கும்மட்டிக்காய் லேகியம் மேகத்துக்கு உள்ளுக்கு எண்ணெய், ரசக்கற்பூரக் கட்டு முதலியன உள்ளன.

133–ம் ஏட்டில் நடுவில் முடிகிறது. இவ்வேட்டின் பின் பக்கம் அகத்தியர் தண்டகம் தொடர்கிறது, ஆனால் அதில் தலைப்பு இல்லை.

---

வரிசை எண் : *1350.* சுவடி எண் : ***690 (c)***

# அகத்தியர் தண்டகம்-100

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 400.
அளவு : 28 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

ஆனந்தர் பாதம் போற்றி
அடவுடன் வாழ்வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி மீதில்
சாற்றிய தண்ட கந்தான்
யெந்தனுள் பிள்ளை யெல்லா
மிதுவறிந் துள்ளே கொண்டு
பின்தமிழ் பிறவில் லாதார்
பெரியவ ராகுந் தானே. 1

முடிவு:

சூட்டியே அஷ்ட்டதுற்கி அஷ்ட்ட பாலாள்
துடியான கிரிடிபீரங்கி வெய்யோள்
மூட்டியே வடமுகத்தில் காழி காணும்
முரைவீச..............வீசம் போடே. 69

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், வசியம், அஞ்சனம், உருமாற்றம், மருந்தீடு முதலியன உள்ளன. மிகவும் செல்லரித்துள்ளது. தலைப்புக்கள் இல்லை.

இது, எமது சுவடி எண் 17 (*d*)/*D*. 22 போன்றது. அதில் முழுதும் இருக்கிறது.

---

**வரிசை எண் :** *1351.* சுவடி எண் : *690 (d)*

# அகத்தியர் பட்சணி

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
**பக்கத்திற்கு :** 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 400.
**அளவு :** 28 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
**ஆசிரியர் :** அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

திருமகள் சோதி யாகும்
செக்தல்லி வல்ஞ் மாது
மரு............ளே யுந்தி
மவுனத்தில் நந்தி தோணக்
கருவது நாமே சொல்வோம்
கண்டதை விண்டி டாதே
பருவமா மாது கற்பம்
பட்சணி யறிந்து கொள்ளே. 1

**முடிவு:**

முற்றிலின் நூறு கூட்டி
முப்பத்தி ரெண்டும் பாரு
........மதுவாய்க் காணும்
..................
....வ ரின்னூல் தன்னை
கைவிட்டார் கருவை......பார்
செத்தபே...............
சேர்ப்பது முத்தி யாமே. 131

சூத்தியென்ற மூர்த்தி சத்தியை......உத்தி
சித்தியென்ற புத்தி....... 132

**அகத்தியர் சுவாமி பட்சணி முற்றும்.**

**காலம்:**

இல்லை

குறிப்பு:

இதில், அரிதாரவெள்ளை, புழுகு, தம்பலப்பூச்சி, வழிவேதை, வசியம் முதலியன கூறப்பட்டுள்ளன.

இது எமது சுவடி எண் 228 (b)/D. 368 போன்றது

இதன் பின்னர் வைத்தியம் எழுதிய ஏடுகள் 3 ஒடிந்துள்ளன.

வரிசை எண் : 1352 சுவடி எண்: 691 (a)

# அகத்தியர்-100-காரத்திரயம்

ஏடுகள் : 17. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7—9 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு : 30 × $3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

ஆதியா மணக்கோலஞ் செய்யு நாளில்
ஆதிமுதல் தேவரிஷி கூட்ட மாச்சு
வேதியனும் மாயோனுந் தானுய் நன்றுய்
விமலனுர் விசுவனுக்கு வாற்றை யீந்தார்

முடிவு:

காமப்பால் மிஞ்சினதாம் கழுதை சென்மம்
கணதேசி நீராலே சரக்கெல்லாங் கட்டும்
மேமப்பா வீதிலென்ன சுருக்குண் டென்றுல்
வெளிதல்லா தேசியுட சாறு தானே. 86

காலம்:

இல்லை

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 358 (c)/D. 717 போன்றது. மேலும் சுவடி எண் 120 (b)/D. 185, அகத்தியர் வகாரம் இருநூறு, சுவடி எண் 289 (c)/D. 515 அகத்தியர் வகாரத்திரயம் சூத்திரம் இருநூறு போன்றும் உள்ளது. பாடவேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன.

வரிசை எண் : 1353. சுவடி எண் : 691 (b)

## ரோமரிஷி சொர்ச்சம்-சூத்திரம்

ஏடுகள் : 7 (18–24). ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு : 30 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : ரோமரிஷி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

அருளிருந்த தேவவிட மானிருந்த தேவவிடந்
திருவிருந்த தேவவிடஞ் செயலுறைந்த தேவவிடம்
பொருளிருந்த தேவவிடம் பொறையிருந்த தேவவிடம்
பரமிருந்த தேவவிடம் பரமசிவன் னஞ்சிலே. 1

**முடிவு :**

சீரப்பா யிடம்வேணும் பொருள்தான் வேணுந்
திறவிலே போனலும் யேவல் வேணும்
யேரப்பா யிதையறிந்து வாதம் பாரு
இந்திரன்போல் வாழ்வதற்கு யிரைவ னுமே. 46

ரோமரிஷி சொச்ச சூத்திர முற்றும்
திருச்சிற்றம்பலம்
குருபாதமே துணை

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், ஈயமாக, எட்டுவகை சுன்னம், கல்லுப்புச் சுன்னம், துரிசுச் சுன்னம், சூடன் சுன்னம், முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1354. சுவடி எண் : 691 (c).

## மச்சமுனியார் நிகண்டு

ஏடுகள்: 11. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7—9 வரிகள். கி. எண்ணிக்கை : 400.

அளவு : 30 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : மச்சமுனியார். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

முப்பாழுக் கப்பால் முடிந்தமுத லென்னுளுந்
தப்பாமற் பூரணத்தே சாறுவாய்—எப்போதும்
வேகாச் சடலமுற்றி வேண்டுங் கெசமுகத்தான்
சாகாக் கிணேசன்றுள் தான்.

**முடிவு:**

ஓதிடறி வாலே உள்ளஞ் செழுத்தையும்
ஆதியு மந்தமு மானமும் பூரணம்
சோதியினு தனதுரிய மிறந்திடம்
நீதியா யின்பம் நிலேத்திடு முத்தியே. 106

மச்சமுனியார் நிகண்டு முற்றும்
தேவி சகாயம்
குருபாதமே கெதியாகவும்
சுப்புருயர் துணேயாகவும்.

**காலம்:**

இல்லே

**குறிப்பு :**

இது, எமது சுவடி எண் 31-B(a)/D. 53 போன்றது. ஆயினும் பாட வேறுபாடுகள் நிறைய காணப்படுகின்றன, இதில் முப்பு முறையும் ஞான மார்க்கமும் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1355. சுவடி எண் : 691 (d).

## கருவூரார் பாடல்

ஏடுகள்: 3. ஏட்டின் நிலேமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 30 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: கருவூரார். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

**வெண்பா**

மூவா யிரத்தில் முழுப்பாடல் முன்னூறு
பாவா யுரைத்தநொண்டி பாடல்—பூவான
முப்பூவின் பாடலென முக்கியமுடன் வாதவித்தை
முப்பதோர் பாடல் மொழி. 1

முடிவு :

ஊதுபற்பம் வெள்ளியிலே ஒன்பதரை தப்பாது
நீதியடி பூரணத்தில் நேருவாய்—பாதமது
சத்தியாந் தேகஞ் சிரமமுற்றங் காயுவாத
முத்தியா முப்பத்தொன்றே முன். 31

குருபாதமே துணை

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், முப்புச் சுன்னம், ரசச் சுன்னம், வேதைச் சரக்குகள் முதலியன கூறப்பட்டுள்ளன.

இது, எமது சுவடி எண் 289 (d)/D. 516 போன்றது. பாடவேறு பாடுகள் மிகுந்து காணப்படுகின்றன,

---

வரிசை எண் : 1356 சுவடி எண்: 691 (e)

# இராமதேவர் சூத்திரம்

ஏடுகள் : 37. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 1200.
அளவு : 30 × 3½ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

ஆதியந்த மெய்நிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் அறிவைக் கூடிப்
பாதியாய் முப்பொருளு மூன்று மொன்ருய்
பரவெளியாய் நின்றபரா பரையின் பாதம்.

**முடிவு:**

தாங்கியே பட்சணியில் லட்சமுரு வேத்தித்
தனித்திருந்த காளிகோட் டத்தில் தாக்கு
ஓங்கியே மண்டலந்தான் களித்து வாங்கு
உறுதியாம் பெலிபூசை நடத்தி டாயே. 187

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், உப்பு, சூதக்கட்டு, செந்தூரம், வெடியுப்புச் செயநீர், அயம் செந்தூரம், சாரக்கட்டு, காந்த கவுளி, அயசெம்பு, உப்புக்கட்டு, சூதமணி லிங்கக்கட்டு, துரிசிச் சுன்னம், தாளகச் சுன்னம், கெந்தி மெழுகு, பாஷாணம், அயமுருக, வழலை, அட்டமாசிங்கு, உடல்ச்சக்கரம் முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 324 (e)/D. 640 போன்றது. இது முற்றற்றது. அதில், முற்றுமுளது. பாட வேறுபாடுகள் உள்ளன.

——

வரிசை எண்: 1357. சுவடி எண்: 691 (f)

## அகத்தியர் திருநடன சூத்திரம்

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு: 7—8 வரிகள். கி. எண்ணிக்கை: 300.
அளவு: 30 × 3½ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம் :

நாடியதோர் பூரணமாம் வேதாந் தத்தில்
நடனதிரு சூத்திரத்தைப் பாடு தற்கு
யாடியதோர் கணபதியுங் கந்தன் காப்பு
வருள்பெருகுஞ் சித்தர்முதல் ரிஷிகள் காப்பு

முடிவு :

........புறுகெந்தி சூதம் ரெண்டுமே
நால்சீலை மண்செய்து காடை மூன்று
வேனென்ற சாதிலிங்கம் வெகுநோ யக்க
வெள்ளியிலே....தெட்டுச் சூத்திரந்தான் முற்றே. 48

குருபாதந் துணை
தேவி சகாயம்
சுப்புருயர் துணை
கொல்ல ஆதியப்பனுக்கர் சூத்திரம்
விநாயகர் துணை.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 186 (h)/D. 301 போன்றது. பாட வேறு பாடுகள் மலிந்து கிடக்கின்றன.

இதில், ரசவாதம், ஞானசித்தி, அரிதாரக்கட்டு, கெந்தகக்கட்டு முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1358. சுவடி எண் : 691 (g)

# பாஷாணக்கட்டு முறை

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 6—7 வரிகள். கி. எண்ணிக்கை : 40.
அளவு : 30 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

பருத்திவிரை பலம் 8. இடிச்சு தூள்பண்ணி, ஒரு பலம் வெள்ளி ½ பலம் நாருலேவைச்சு கொளிய பையில் கட்டி மூனு சீலேமண் செய்து பெரிய பொடம் போடவும் பற்பமாகும்.

**முடிவு:**

கெந்தகம் கூட்டி பொடி செய்து மூசையிலிட்டு....ரெண்டு விராகனிடை வச்சுக் கரிபோட்டு ஊத ரசம் கட்டிபோம். கரு வூமத்தங் காரியில் யிருவது பிடம் போட செந்தூரமாம்.யிதுக்கு சுக்குலம் விந்து கூட.

**காலம் :**

இல்லே

**குறிப்பு :**

இது வெவ்வேறு செய்திகளேக் கொண்டது. நடு ஏட்டில் சக்கரங்கள் உள்ளன.

---

வரிசை எண் : 1359 சுவடி எண் : 691 (h)

## அகத்தியர் சூத்திரம்

ஏடுகள் : 11. ஏட்டின் நிலேமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி . எண்ணிக்கை: 300.
அளவு : 30 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

உலக மெய்க்கு மொருபெருங் கருணே
பலகலே செய்புகழ் பாவைப் புகலவனே
கல(னி)ல் மெய்ஞ்ஞான மா....அனேக்
கலயில்வைத் ததிசெயஞ் சாற்றுகின் றேனே. 1

**முடிவு:**

ஆசையா மதுவை யுண்டா
லதில்ரெட்டி தூரம் போவார்
ஈசனு ராணை திண்ண
மிடைவிட திருக்க முற்றே! 67

தேவி சகாயம்
குருபாதம் துணை

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில் வைத்தியம் பல படியாகப் பேசப்படுகிறது.

---

**வரிசை எண் :** 1360 **சுவடி எண் :** 691(i)

# அகத்தியர் பூரண சூத்திரம்--216

ஏடுகள் : 47. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 1500.
அளவு : 30 × 3½ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

கார்செரி மெய்யன் வெண்மை
கடவுளைங் கரனுர் பாதம்
பேர்பொரு ளாண்மை தன்னை
பூரண ரைவில் வைத்தோர்
தார்செறி கொன்றை சூடி
தாய்சர சோதி தந்த
ஞர்மத வானைப் பிள்ளை
நல்ப்பதங் காப்ப தாமே. 1

**முடிவு :**

தாமிந்தநாத பூரணத்தைக் கொணியா நீந்தாற்
றலைதெரித்துப் போகுமடா சத்தியஞ் சொன்னேன்

நாமிந்தப் படிசோன்னேன் யோகி யாவாய்
நலமான பூரணசூத் திரந்தான் முற்றே. 216

அகஷ்திய சுவாமியார் அருளிச் செய்த
பூரண சூத்திரம் முற்றும்
திருச்சிற்றம்பலம்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இது, எமது சுவடி எண் 288 (f)/D. 512 போன்றது. இதில் பாட பேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

இதில் கணேசன் பூசை, ஆதாரதீட்சை முதலியன கூறப்பட்டு உள்ளன.

---

வரிசை எண் : 1361. சுவடி எண் : 691 (j)

## பஞ்சலோக வேதை

ஏடு : 1. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 6 வரிகள். கி. எண்ணிக்கை : 20.
அளவு : 30 × $3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை, முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

தங்கம் தங்கம்சுத்தி பூசிமூணுதிரம்
செம்பு காவிமண்பழச் காச்சிதோய்க்கவும்
இரும்பு சாறுவிட்டு செம்புஞ்சுத்தி
நாகம் அரைச்சுத் வெடியுப்புசீனம்
கருவங்கம் தகட்டுக்கு 8—2—சரக்கு

**முடிவு :**

கருவங்கம் சுத்தி; கருவங்கம் உருக்கி கத்தாளை சொருவில் ஏழுதிரம் சாக்கவும் விராகனிடை 1. விராகனிடை 5-க்கு சுத்த கட்டி வெள்ளி விராகனெடை 5. குட்டி உருக்கி களக்கு ஆகும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் பஞ்சலோகமும் அதனைச் சுத்தி செய்யும் முறையும் மட்டுமே உள்ளன.

---

வரிசை எண் : 1362 சுவடிஎண் : 691 (k)

# அகத்தியர் சூத்திரம்--50

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 80.
அளவு : 30 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

நாடியதோ ரகண்டபரி பூரணமாய் நின்ற
நாதமுறுங் கிணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனும் மென்னைப் பெற்ற
யாற்றுளும் மென்னுவில் குடிகொண் டேதான்

முடிவு :

காக்கென்ற வயித்தியரே யிந்த நூலின்
கைமுறை..............ட்டாதே நூல்கு டாதே
தீக்கென்ற பன்னிரண்டு வருஷம் காத்தால்
சோதிச..................................

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில்; நீலகண்ட செந்தூரம் சொல்லப்பட்டிருக்கிறது.

---

வரிசை எண்: 1363 சுவடி எண்: 692.

# அமிர்தவாசகர்--ஞானயோக சாதனம் நாதாந்த மாலை

ஏடுகள் : 29. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது.
பக்கத்திற்கு: 10-11 வரிகள். கி. எண்ணிக்கை : 750.
அளவு : 22 × 4½ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஸ்ரீ கிர்ஷிணமூர்த்தி கீதையில் சொன்னது : கன்மயோகம், ஞானயோகம், பக்தியோகமாகிய மூன்றுனுள் முதலாவது கன்மயோகம்—காயகற்பம், ரேசக, பூரக, கும்பகஞ் செய்து வாயுவைக் கொண்டு மனதை நிறுத்துகிறது. இது பிரயாசத்தி லபிக்கவேண்டியது.

**முடிவு:**

பாவனு த்யானமே பிர்மமென்று சொல்லப்படும் மோட்சம் எந்த உபாயத்தினுலே ஆமென்றதற்குச் சற்குரு கடாட்ச ஞான யோகானுபவத்தினுலே ஆகுமாம்.

முற்றிற்று.

**காலம்:**

இப்படிக்கி அட்சய வருஷம், புரட்டாசி மாதம் 30-ம் தேதி ஞயித்துக்கிழமை கலியுகாதி 4668 சாலியவாகன சகாப்தம்(?), இங்கிலீசு 1866-ம் வருஷம் 14-ம் தேதி.

9-வது ஏட்டில், பாரபவ வருடம், ஆவணி மாதம் 26-ம் தேதி புதன்கிழமை அசுவனி நட்சத்திரம் விநாயகர் சதுர்த்தி பிருகு தீர்த்த தினத்தில் திருமழிசை யாழ்வார் சந்நிதியில் நித்த முத்த பத்த கேவல பிரபன்னுள் சமுகத்தில் அரங்கேற்றி மண வாள மாமுனி சந்நிதானத்தில் அந்திவ்யக ஞானப்பிரகாச ராமானுஜ மகாமுனி அருட்பிரசாதத்தினுல் காஷாயம் வாங்க லாயிற்று.

இப்படிக்கு அந்திவ்யகஞானப் பிரகாச ராமானுஜ மகா முனீஸ் தாசன், அந்திவ்யக ஞானப் பிரகாச நரசிங்க மாமுனீஸ சகல வேதாந்தா சாரியங்களையு முண்ட ஓங்காரத்தைப் பாங் காக்கின ஞானயோக சாதன நாதாந்தமாலை முற்றிற்று.

குறிப்பு:

இதில் கீதையைச் சார்ந்த ஞானயோகத்தைப் பற்றி விளக்கம் கூறப்பட்டுள்ளது. அமிர்தவாசகம் (நேரிசை வெண்பா) எதிராசர் வணக்கம், நம்மாழ்வார் வணக்கம், திருமழிசையாழ்வார் வணக்கம், ஆசாரியர் வணக்கம், கடவுள் வணக்கம், நாதாந்த மாலை, காரண ஆசாரியர் வணக்கம் முதலியன உள்ளன. கடவுள் வணக்கம் முடிய 5 பாடல்களும் நாதாந்த மாலையில் 10 வரை செய்யுள் எண்கள் உள்ளன. பின்னர் விளக்கங்கள் உள்ளன.

இதில், தாயுமானவர் பாடலும் இருக்கிறது.

———❀———

வரிசை எண் : 1346. சுவடி எண் : 693 (அ)

# வாலை பூசை

ஏடுகள் : 12. ஏட்டின் நிலைமை : பழுதுபட்ட நிலை.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 150.
அளவு : $23\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : தன்வந்திரி. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

பண்ணப்பா வாலைபூசை சொல்வேன் கேளு
பண்பான ஓம்கிலியும் சவ்வென் றேசொல்
அண்ணப்பா அய்யும்றீயும் யென்று தானும்
அன்பான வறியும்நறியும் மென்று சொல்லு
வன்னப்பா ஆம்ஊம் வென்று மாட்டு
வளமான வாலையுட மந்திரந்தா னுச்சு
நண்ணப்பா நாற்பத்தி அஞ்சுக் குள்ளே
நலமான லெச்சதென்னு யிரமும் போடே,

முடிவு :

திறமான பூசையிலே மனது வைத்து
சித்திதர வேணுமென்றே தியானம் செய்து
உறமான உன்மனதை பேதி யாதே.
ஒகோகோ ருத்திரனும் உண்மை சொல்வாற்
பறமான பரமகுரு ளுதனே நீயும்
பணிந்துமே பத்திரங்கள் வழக்கஞ் செய்து
சறமான சூரியனிற் பூசை பண்ணித்
தான்வணங்கி துரிசினுட சுன்னம் தானே. 27

தர்மந்திரி வாக்கு.

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில் குண்டலினி சக்தி, தேங்காயுடைத்தல், வாலை வசியம், நாற்பத்து முக்கோண சக்கரம், சுப்பிரமணியர் மூலம், எண்கோணம், வடுகன் சித்தி முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1365. சுவடி எண் : 693 (b)

## புருஷ யீடு

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : $19\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

கருவான போக்கொண்டு சொல்லக் கேளு
காட்டுரே னிடுமருந்து கவுடில் லாமல்
வருவான்பொற் கையான விரையி னோடு
ஓதுவேன் ஐவிரலி விரையி னோடு
அருவான யிப்பூலியின் நலரி வேரும்
அப்பனே புல்லென்ற ஆமணக்கின் வேரும்
திருவான குழியானை சுழல்வண் டோடு
தீர்க்கமா யாவாரையின் பட்டை கூட்டே. 1

**முடிவு:**

வாட்டயிலே வெறிகொண்ட நாயைப் போலே
வருவாள்பாரு ஒன்னிடத்தில் பத்துகொண்டே தான்
அட்டையிலே உனக்கடுமை யாகிப் போவாள்
அப்பனே யின்னமொன்று அறையு ரேன்யான்
நாட்டை யிந்திரமாங் கோபப் பூச்சி
நாட்டடா பத்துமட்டு மெடுத்துக் கொண்டு
ஊட்டவே விந்துவுடன் புனுகுங் கூட்டி
வோகோகோ பச்சையென்ற பூரந் தானே.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில்; இடுமருந்து, செய்யும் முறை, இடுமருந்து முறிய மருந்து, பெண் வசியம் முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1366. சுவடி எண் : 694

# கொங்கணர் மூவாயிரத்து முறை

ஏடுகள் : 38. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 6—7 வரிகள். கி. எண்ணிக்கை : 1000.
அளவு : 36 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : கொங்கணர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

வாறுகேள் ஞேயில் லாத
வளம்பிறு சிடத்தைப் பாத்து
தாறுயர் பாண்டத் துள்ளே
தனிமலம் விடவுஞ் சொல்லி
வேறுகேள் அமுரி வாத்து
விளங்கியே குளம்பு செய்து
கூறுகேள் காச்சி வத்தக்
கொட்டிநீ கலையம் பாச்சே. (?)

முடிவு :

ஆமப்பா புத்தி சொன்னேன்
அளிபுத்தி சொல்ல யில்லை
ஆமப்பா வேதை கண்டால்
கற்பத்தைப் பின்பு கொள்வாய்
ஆமப்பா சித்தி......
..................
...................
...................................... 302

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில்; ஏடுகளின் தொடக்கம் அரித்துள்ளதால் பக்கங்களின் எண்கள் இல்லை. முதலில் 2 ஏடுகள் பாட்டெண்கள் இல்லாமல் உள்ளன. பிறகு 'கொங்கணர் நடுக்காண்டம் பிண்ட வித்தை' என்ற தலைப்பில் செய்யுட்கள் 224 முதல் 266 வரை உள்ளன.

அடுத்து, ஒருபகுதி செய்யுட்கள் 272 முதல் 305 வரை உள்ளன. பின்னர், ஒருபகுதி 215 முதல் 301 வரை உள்ளன.

---

வரிசை எண் : 1367 சுவடி எண்: 695 (a)

# அகத்தியர் கர்ம சூத்திரம்

ஏடுகள் : 37. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு : 23 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

சீரணி கொண்டை சூடுஞ்
சிவனிரு பாதம் போத்தி
வாரண முகத்தோன் பாதம்
வணங்கிநாத் தன்பதுஞ் சொல்ல.

**முடிவு:**

வற்ணமே பாரு லோகம்
மாரண மதிக சூட்சம்
அன்னமே சொன்ன நூத்து
அன்பது மறிவா முத்தே. 151

வயிரவமூர்த்தி
குருபாதமே துணை.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இது எமது சுவடி எண் 324 (b)/D. 637 அகத்தியர் வைத்தியம் 150 போன்றது. பெயர் வேறுபாடாயுள்ளது.

---

வரிசை எண் : *1368.* சுவடி எண் : *695 (b)*

# அகத்தியர் சுவாமியள் நடுக்காண்டம் முன்னூறில் கர்ம நிவர்த்தி

ஏடுகள் : *89.* ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : *7-8* வரிகள். கி. எண்ணிக்கை : *2000.*
அளவு : *23 × 3½* சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

பூரணமா மூலமுத லர்ரு தாரம்
புரியட்ட திசைவாயுவு நாடி மூன்று
காரணமா யிடைபின்னுயிச் சுழினை யாகிக்
கலந்துநின்ற வாதபித்த சிலேற்பன மாகி

**முடிவு:**

தெரிசனமாங் கண்களிலே வருவ (தேது
.......................யமுந்தம்

கரிசனமா மின்னூலில்க் கற்ம தற்ம
.............. மருந்துவகை கணக்கு முத்தே. 302

அகத்தியசுவாமியள் பாடல்வயி.........
க்காண்டம் கற்ம சூத்திரம் எழுதி நிறைந்தது
முத்தும்
தேவிசகாயம்

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இது, எமது சுவடி எண் 8/D. 9 போன்றது. இதில் முன் செய்த கரும வினையினால் இன்னின்ன நோய் வந்ததென்றும் அதற்கு இன்னின்ன சாந்தி செய்ய வேண்டுமென்றும், அதனைப் போக்கிக் கொள்வதற்கு இன்னின்ன மருந்துகளைக் கொள்ள வேண்டுமென்றும் கூறப்பட்டு உள்ளன. இது எண்சீர் விருத்தத்தாலானது.

---

வரிசை எண் : 1369 சுவடி எண்: 696

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 120. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 4-6 வரிகள். கி. எண்ணிக்கை : 1500.
அளவு : $18\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**சொற்பண பஸ்பம்**

சாணுற்க் காசு 1-க்கு புத்துமண்ணால் கவசம் கட்டி தீயில் வெதுப்பி இம்மாதிரி மூன்று திரம் சுத்தி செய்து கோங்கிலவின் வேர்ப்பட்டை வேரை அதின் பூவும் மூன்றையும் சமமாகச் சேர்த்து நேக அரைத்து மேல்படி சரக்குக்குக் கவசம் விரல்கனம்.

**முடிவு :**

........ பால்போல் பொங்கிவர
பத்தில் அரைப்...........
ய்து பேரிட்டி அடை கஷாயமாக
வைத்து அ..............
படவும். மேல்படி வியாதிகளுக்கு
குடுக்கவும். தீறம்.

**காலம் :**

விய வருடம் ஆவணி மாதம் 27-ம் தேதி சுக்குர வாரம் ஆரம்பமானது.

**குறிப்பு :**

இதில், ரசபற்பம், லிங்க செந்தூரம், தாளக பற்பம், ஒந்தலைவலிக்கு, நாகபஸ்பம், கிஷ்ண அப்பிரேகச் செந்தூரம், பாஷாண பஸ்பம், மேக எண்ணை, அதிசார பேதிக்கு கஷாயம், வசியமுறை, காட்டேரி பிசாசு ஆடுகிறதுக்கு, பெண்டுகளுக்கு பால் சுரக்கும் மந்திரம் முதலியன உள்ளன.

ஏடுகள் மூன்று நான்கு விதமாக உள்ளன. மை பூசப்படாத சுவடியாக உள்ளது.

---

வரிசை எண் : 1370. சுவடி எண் : 697 (a).

## தட்சிணாமூர்த்தி பரிபாஷை-500--முதற்காண்டம்

ஏடுகள்: 30. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 10—11 வரிகள். கி. எண்ணிக்கை : 750.
அளவு : $19 \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

பரம ஞானு தையத்தின்
பரஞ்சுட ருலகுக் கெல்லாம்
சிரமென வுதித்த ஞானம்
தெய்வநா யகன்தாள் போற்றி

வாமென வகார யோகம்
வைப்புநூல் பாஷை யெல்லாம்
குருமுனி தமிழாய்ச் செய்ய
குமரனேங் கரந்தாள் காப்பே.

**முடிவு:**

நோக்கிப்பா ரிந்தநூல் தனக்குச் சாட்சி
ரோமரிஷி அன்னூறும் நந்தி நூலும்
நோக்கிப்பா ரிதுனுலே தெளியா துண்டோ
சிவசிவா குருத்தேடித் திரிய வேண்டாம்
பாக்கியமாம் நூலினிலே ரெண்டாங் காண்டம்
பகருகிறேன் முதற்காண்டம் பரமா முற்றே. 101

வராகி துணை.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதன் முன்னர் வைத்தியம் எழுதிய ஏடுகள் இரண்டு சேர்க்கப்பட்டு உள்ளன. ஏடுகளின் எண்கள் இல்லாததால் முன்பின்னுகக் கோர்க்கப் பட்டுள்ளன. இது எமது சுவடி எண் 270 (a)/D. 484 அகத்தியர் பரிபாஷை முதற் காண்டம் போன்றது. இது தட்சிணுமூர்த்தி பரிபாஷை என்றுளதால் தட்சிணுமூர்த்தியும் அகத்தியரும் ஒன்று போலும்.

பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. இது நல்ல பாடமாகவும் தெரிகின்றது.

---

வரிசை எண் : 1371. சுவடி எண் : 697 (b).

# தட்சிணுமூர்த்தி பரிபாஷை-500-இரண்டாங்காண்டம் வழலைக் குருமுறை

ஏடுகள்: 26. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 10—11 வரிகள். கி. எண்ணிக்கை : 750.
அளவு : 19 × 3½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: தட்சிணுமூர்த்தி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

முத்தணி நகையான் வேத
முதல்வியைப் பாகம் வைத்த
சுத்தமெய்ஞ் ஞான தீபம்
சுடரெனுஞ் சோதி பாதம்
நித்தமுந் தொழுது போத்தி
நீதிசேர் பாஷை நூலின்
புத்தமீன் ரெண்டாங் காண்டம்
பொருளினைப் புகலு வோமே. 1

**முடிவு:**

தூருன நாலினிலே யோகஞ் சேர்வேன்
சுத்தவுப்பு யெடுக்கும்வகை அஞ்சில்ச் சொல்லும்
சீருன வுப்பெடுக்கும் கையைப் பாரு
தெளிவான ரெண்டாங்காண்டஞ் சிவநூல் முற்றே.

ஓம் வராகி துணை.

ஓம் உருத்திர கங்காளி துணை.

குரு வாழ்க; குருவே துணை.

தேவிசகாயம்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதன் பின்னர் ஒரு ஏட்டில் வைத்தியம் எழுதப்பட்டுள்ளது. ஏடுகளில் பக்க எண் இல்லாததால் முன் பின்னாக கோர்க்கப்பட்டு உள்ளன. இது எமது சுவடி எண் 270 (*b*)/*D*. 485 அகத்தியர் பரிபாஷை இரண்டாங்காண்டம் போன்றது. இது; தட்சிணாமூர்த்தி பரிபாஷை இரண்டாங்காண்டம் என்றுளது. தட்சிணாமூர்த்தியும் அகத்தியரும் ஒன்று போலும்.

இதில், பாடவேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. இது நல்ல பாடமாகவும் தெரிகின்றது.

---

வரிசை எண் : 1372. சுவடி எண் : 698 (a)

# இராமதேவர் மகாசாலம் 800-பாயிரம்

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 50.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

சீருலகில் பொதிகைக் கிரிவளர் தென்னாடு
தேவரிஷி மகாமுனிவர் சீஷனார் .........
தாருலகில் ஸ்ரீராம ரென்னும் பேரால்
சாகாத கல்வியெனுந் தமிழ்களா .........

**முடிவு :**

ததியறிந்து தன்னிலையைத் தானே கண்டு
தவறாமல் சிவயோகத் தலத்தின் நின்று
விதியறிந்து ஸ்ரீராம தேவ ராகி
விளங்கினேன் மகாசாலப் பாயிரத்தின் வாறே. 19

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் இராமதேவர் எழுதிய மகாசாலத்தின் பாயிரமும், இதில் உள்ள காண்டங்கள் எட்டு என்றும், நூல் கோர்வையும் கூறப்பட்டுள்ளன.

இதற்கு முன் ஏட்டில் இதில் உள்ள நூல்களின் அட்டவணை உள்ளது இவ்வேட்டின் இறுதியிலேயே முதற்காண்டம் தொடங்குகிறது.

---

வரிசை எண் : 1373. சுவடி எண் : 698 (b)

# இராமதேவர் மகாசாலம்-800-முதற்காண்டம்

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.

அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

**விந்து உற்பத்தி**

வாறணமா முகனையடித் தொழுது போத்தி
வாணிமனோன் மணிபுவனைக் கமலம் போற்றி
நிறணிசோதி திருபுரையின் பதமே போத்தி
நின்றிலங்கும் வாமியருள் பாதம் போத்தி.

**முடிவு:**

துசமாக லெட்சமுரு செவிக்கக் கேளு
துதிபெறவும் வாலையென்ற பூசை தன்னில்
அசமாகும் நால்வகைதன் தொழிலுஞ் சித்தி
அருளியதோர் முதல்க்காண்டம் சித்தி முத்தே. 114

ரமதேவரருளிச் செய்த மகாசாலம் எண்ணூரில்
முதல்க்காண்டம் முற்றும்
சடாட்சர தண்டாயுதபாணி நமஸ்து.

**காலம்:**

கீலக வருஷம் தை மாதம் 2-ம் தேதி சனிக்கிழமை மத்தியானம் அரியாங்குப்பம் குட்டைய கிராமணி குமாரன் நாராயணசாமி சுகஸ்த்த லிகிதம்

சாற்குருபாதமே கெதி.
சிவமயம்.

**குறிப்பு:**

இதில், விந்து உற்பத்தி, பித்தம் குலக்குரு, அமரபட்சம், பூருவ பட்சம், அண்டபிண்ட கருவிளக்கம், அஸ்த்தினிக் கரு, தலைபிண்டக் கரு சுத்தி, பரிமளவாடைப்பொடி, சாபம் நிவர்த்தி மந்திரம், அஷ்ட்ட கர்மப்பலகை, சுக்கிர வாரத்தில் வாலை பூசை முதலியன உள்ளன.

இதன் தொடக்கம் பாயிர ஏட்டின் கடைசியில் இருக்கிறது.

---

வரிசை எண் : 1374 சுவடி எண் : 698 (c)

# இராமதேவர் மகாசாலம் 800 இரண்டாங் காண்டம்

ஏடுகள்: 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

சித்தியருள் பிராணுய சோதி பாதம்
தேவரிஷி கமலபதந் தேவி பாதம்
சந்திமயேஸ் பரியருளுங் கணேசர் பாதம்
தற்பரமாய் நின்றசதா சிவத்தின் பாதம்

முடிவு :

நிதியுடன் மகாசாலம் எண்ணூர் பீடம்
நிரஞ்சனமாங் காண்டமெட்டி லிருகாண் டந்தான்
சோதியொளி வறியநந்திப் புந்தி வாட்கை
சொல்லிவிட்டே னிருகாண்ட சூட்ச முற்றே. 115

ராமதேவரருளிச்செய்த இரண்டாவது காண்டத் தொழிலில்
விநோத சாலம், மகாசாலப்பொடி, உருமாத்த யீடு;
அஞ்சனக் கண்ணுடி, ஆகாச மோடி,
மாமோகனக் குளிகை, வாயுஸ்தம்பம்,
ஜலஸ்தம்பம், மிருகஸ்தம்பம்,
அக்கினிஸ்தம்பம், ஸ்ரீவசியம், புருஷ வசியம்,
கெவுனக் குளிகை, கூண்டுவிட்டுக் கூண்டு பாயும் மாற்கம்
இப்படி விநோத சாலம் இரண்டாங் காண்டம்
யெழுதிமுகிஞ்சுது, அரியாங்குப்பம்
நாராயணசாமி சுகஸ்த்த லிகிதம்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், மகாவிநோதஸ்தம்பனமென்றறியவும், ஸ்ரீ ராமதேவர் பிரபந்தமறியவும், வேதரிஷி சூதம், முதலியன உள்ளன. முக்கிய தலைப்புகள் மேலே கூறப்பட்டபடி சுவடியின் கடைசியிலேயே உள்ளன.

வரிசை எண் : 1375. சுவடி எண் : 698 (d)

## இராமதேவர் மகாசாலம்--800 மூன்றாங் காண்டம்

ஏடுகள் : 16. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

**சோசியம்—ராசி லக்கணம்**

புத்தியி னுந்தி வாட்கை
புலத்திய னருள்தன் னுலே
முந்தியினு மாயி ரத்தில்
முதலருள் விளக்க மான
தந்திரமா முகவன் பாதந்
தற்பரத் தருளே கண்டு
நந்தியா யின்னூல் வேத
நான்முக னுதி காப்பே. 1

**முடிவு :**

அசனித்தேன் அமுர்தசெய ராமன் பாடல்
அதீத செக சால மறிந்திடவுஞ் சொன்னேன்
புசனித்தேள் சென்மதத்துவமுஞ் சொன்னேன்
பூரணமா முக்காண்டம் புகழ்வாம் முற்றே. 115

ருமதேவரருளிச் செய்த மூன்றுங் காண்டம்
எழுதி நிறை வெய்தியது.

**காலம் :**

கீலக வருஷம் தை மாதம் 16-ந் தேதி, அரியாங்குப்பம்
நாராயணசாமி நெட்டெழுத்து

**குறிப்பு:**

இதில், மும்மூல சூட்சம், மெஞ்ஞான சுட்சம், அமைப்பு விந்துநாத பிலன் அறிய, புண்ணியத்தால் வரும் பிலன், அண்ட பிண்ட சக்கரம்,

மூலவண்டம், மூலத்தின் பெயர், அடி மூலத்தின் பெயர், நடுமூலத்தின் பெயர், முடிமூலத்தின் பெயர், மவுன அண்டத்தில் பிரம்மக் கல்லின் பெயர் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1376. சுவடி எண் : 698 (e)

## இராமதேவர் மகாசாலம்-800-நாலாங்காண்டம்

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

**சென்மராசி**

பூறணிதன் கமலபத மமுர்த பீடம்
போதமய மானபுலத் தீசர் பாதம்
வாரணிசர் வாணிபதம் வாமி பீடம்
மவுனமதில் நிறைந்துநின்ற மயேச்சுரன் பாதம்.

**முடிவு :**

நீழ்புவியில் தவமுனியே காண்ட மெட்டில்
நின்றிலங்கு சதுர்க்காண்டம் விநோத மாடக்
கேள்விசெய ராமனருள் மொழிநூற் சொச்சம்
கிறுபைதரும் சருக்கம்னூல் சுருக்க முற்றே. 115

குருவே துணை
ருமதேவர் அருளிச் செய்த மகாசாலம்
சதுர்க்காண்டம் எழுதி நிறைவேறினது.

**காலம் :**

கீலக வருஷம் தை மாதம் 20ம் தேதி புதவாரம், பரணி நட்சத்திரம் பூருவபட்சம் இந்தநாளில் அரியாங்குப்பம் வயித்திய நாராயணசுவாமி தனக்காக எழுதினது.

சுகஸ்த்தலிகிதம்
ருமதேவர் பாதம் நமஸ்து.

குறிப்பு :

இதில், ஜென்மராசி சாதனக்குறி, வாரமேழுக்கு ராசிப் பொருத்தம், இராசி ஆறுக்கும் லக்கனம் ஆறு பிரித்து சாதனம், பனனிரண்டு எழுத்து களும் படு மூலத்தில் மாறணமூலம், அருக்கன் காலையில் ரவிபட்சம், பிராணவாசி கலை முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1377. சுவடி எண் : 698 (f)

# இராமதேவர் மகாசாலம் 800-ஐந்தாங்காண்டம்

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

அஷ்ட்ட **காண்டத்தில் பஞ்சமுக காண்டத்தில் அஞ்சாவது**

சுருக்கமுத லானைமுகன் பதத்தைப் போத்தி
சுழியில் நின்ற சின்மயமா மருளே போத்தி
வருஞானக் குருவினுட கமலம் போத்தி
வாலைமனோன் மணியின்பத மடியேன் போத்தி

முடிவு :

தனியநின்று நடனமிடும் வேதாந்த காலம்
சாலமதாய் ஆய்ந்துயின்னூல் சுருக்க மஞ்சாய்
**வனியகுல மறவர்வர்க்கம்** மென்மேல் வாழ்க
வசனித்தேன் செகச்சால வாழி முற்றே.

ஸ்ரீராமதேவர் திருவாய் மலர்ந்தருளிய மகாசாலத்தில்
அஞ்சாங் காண்டச் சுருக்கம் எழுதி
நிறைவேறியது
வாணிபதம் நமஸ்த்து

**காலம்:**

கீலக வருஷம் தை மாதம் 22-ம் தேதி அரியாங்குப்பம் குட்டைய கிருமணி குமாரன் நாராயணசுவாமி சுகஸ்த்தலிகிதம்
ஸ்ரீராமசெயம்
சிவமயம்

**குறிப்பு:**

இதில், தன்னை வணங்கிக் குளிசம், வயிரவ தியானம், எரியோந்தித் தயிலம், வல்லூர், ஆந்தை, காக்கை, கோழி, மயில், எதிரி சத்துரு மரணம், ஞேய்களுக்குத் தயிலம், குளிகை விபரம், பாஷாணக்கட்டு, வீரக்கட்டு, தங்கசெந்தூரம் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1378. சுவடி எண் : 698 (g)

## இராமதேவர் மகாசாலர்-800-ஆருங் காண்டம்

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர்- எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

செகச்சால வாணியருள் பாதம் போற்றி
தெட்சணு மூர்த்தியெனுங் கமலம் போற்றி,
அகமேவும் புலத்தீசர் பாதம் போற்றி
அண்டபிண்ட மிரண்டுமுட அருளே போற்றி

**முடிவு :**

நித்தசித்தி முரைப்பதுவும் நிராசை யாஞேர்
நேசம்வைத்து யுணர்வதின்னூல் நெறியுங் காட்டும்
அத்தனென்னை யாண்டகுரு பதத்தைப் போத்தி
ஆருவது காண்டமரு ளதீத முற்றே. 116

ருமதேவ ரருளிச் செய்த ஆருங் காண்டம்
யெழுதி நிறைந்தது முற்றும்.
ஸ்ரீரும செயம்

**காலம்:**

கீலக வருஷம், தை மாதம், 22-ம் தேதி நாயத்துக்கிழமை திருவாதிரை நட்சத்திரத்தில், அரியாங்குப்பத்திலிருக்கும் குட்டையக்கிருமணிக் குமாரன் நாராயண சுவாமி எழுதிய சுகஸ்த்த லிகிதம்.

அம்பாள் துணையுண்டாகவும்

**குறிப்பு:**

இதில், காயாதி கற்பம், சக்தி மவுனம், சிதம்பர சக்கரம், வயிரவர் மூலம், அஷ்ட்டமூலம், அஷ்ட்ட நாகம், அஷ்ட்ட பாலார் சிதம்பர பூசை, அஷ்ட்டமா சித்து தயிலம், அஷ்ட்டமா சித்தில் சாலவித்தை முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1379. சுவடி எண் : 698 (h)

# இராமதேவர் மகாசாலம்-800 ஏழாங் காண்டம்

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

சத்தகாண்டச் சருக்கம்

அதிவிதமாய் நின்றபரம் பாதத்தாள் போத்தி
அண்டபிண்டம் பிரமாண்டம் அருளே போத்தி
மதியில்நின்று நடனமிடும் றவியே போத்தி
மகிழ்ந்துயெனை யாண்டகுரு பரனே போத்தி

**முடிவு:**

பேறுபெற சின்மயத்தின் பெருமை வேணும்
பெரியோர்கள் பதம்பணிந்து பிழைக்க வேணும்
கூறுடைய மகாசாலக் காண்டம் எட்டில்
குறிப்புடைய சத்தகாண்டங் குருவா முற்றே. 117

குருவே துணை
ஸ்ரீராமதேவரருளிச் செய்த மகாசாலக்காண்டத்தில்
சத்தகாண்ட சாலம் எழுதி முகிந்தது.

**காலம் :**

கீலக வருஷம் தை மாதம் 27-ந்தேதி சோமவாரம் புனர்பூச நட்சத்திரத்தில், அரியாங்குப்பமிருக்கின்ற கங்கைகுலத் துற்ப வித்த வயித்திய நாராயண சுவாமி சுகஸ்த்த லிகிதம்

ஸ்ரீராமசெயம்

சிவமயம்

**குறிப்பு :**

இதில், நவரசக்குளிகை, நவரத்தினமறிதல், வாசிநிலை, அட்டாங்க யோகம், அம்பிகாயோகம், அண்டபிண்டக்குறியறியவும், கற்ப முண்ணும்படி, சிவயோகம் தியானம், மவுனம், பிராணய பெந்தம், நாடி நேர்மை, நூல்த்துகை, ஆயிரத்து சொச்சம் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1380 சுவடி எண் : 698 (i)

# இராமதேவர் மகாசாலம்-800 எட்டாங்காண்டம்

ஏடுகள் : 17. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7 வரிகள். கி. எண்ணிக்கை: 700.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

**அஷ்ட்ட காண்டம்**

குருமுனிவர் பதம்போற்றிக் கிணேசன் பாதம்
சூர்ந்துநின்ற புலத்தீசர் அருளே போத்தி
மருவுபுகழ் வாலைமனோன் மணியைப் போத்தி
மருவியெனை யாண்டபரா பரையின் போத்தி

**முடிவு :**

கழிவுமில்லாக் கருவிகர ணாதி நேர்மை
காயசித்தி தேகசித்தி யாகும் நேர்மை
வழிபலவா மகாசால மஷ்ட்ட காண்டம்
வசனித்தோம் பிருணய வகுப்பா முற்றே. 116

மகாசாலம் எண்ணூறில் அஷ்ட்ட காண்டம்
எழுதி முகிந்தது முற்றும்.
சுப்புராயர் துணையாகவும்.

**காலம்:**

கீலக வருஷம் தை மாதம் 28-ம் தேதி சுக்கிர (வெள்ளி) வாரம், பூர நட்சத்திரத்தில், அறியாங்குப்பம் குட்டைய கிருமணி குமாரன் நாராயண சுவாமி சுகஸ்த்தலிகிதம்

ஸ்ரீராமதேவர் பாதமே நமஸ்த்து

குறிப்பு :

இதில், புலத்தியர் இராமதேவருக்கு அனுக்கிரகம் பண்ணினது, சர்ப்பயாகம் படுபட்சி, மாரணக்கருவி, சிறியா நங்கை குளிசம், அம்பு குண்டு, வெட்டருது, படைவிலங்கும், எதிரி மாரணம், கெந்தக த்தயிலம் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1381. சுவடி எண் : 698 (j).

# இராமதேவர் சோசிய சூத்திரம்-17

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 42×3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

அண்டரண்டம் நிறைந்தபொருள் வேத மான
ஆயிரத்தெண் க(ம)லபீட மருளே போத்தி
பிண்டமென்ற கருக்குருவாம் பதினெண் பேர்க்கு
பிரபல்லிய மானபரப் பிரமம் போத்தி

முடிவு :

ஞமப்பா யின்னூலே துலாத்தின் ராசி
நளினமென்ற பிறவியோர்க்கு யெய்தும் பாரு
வாமப்பால் சொரிந்துவிடும் ருமன் வாக்கியம்
வசனித்தோம் சோசியந்தான் வாழ்வீர் முற்றே. 17

துலாராசி யுடையோர்க்கு பலன் சொல்லிய சோசியம் 17
முகிந்தது முற்றும்.

காலம் :

அரியாங்குப்பம் நாராயணன் சுகஸ்த்த லிகிதம்
கீலக வருடம் பங்குனி மாதம் 6-ம் தேதி எழுதியது
ஸ்ரீராமதேவர் பாதமே துணை.

குறிப்பு:

இதில் துலாராசிக்கான பஞ்ச பலன்கள் கூறப்பட்டுள்ளன. வருஷ பலன், மாத பலன், யோக பலன், வாய்வுபலன் முதலியன உள்ளன. பிற ராசிகட்கான பலன்கள் இல்லை.

---

வரிசை எண் : 1382 சுவடி எண்: **698(k)**

# இராமதேவர் பாஷை பதினெட்டு

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8 வரிகள். கி. எண்ணிக்கை : **180.**
அளவு : 42 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

அண்டாண்டம் நிறைந்தகுண் டலியின் பாதம்
அருள்பெருகும் கிணபதியின் அருளே போத்தி
மண்டலங்கள் மூன்றுரவி மதியாய் நின்ற
மதியிரவி சுழிமுனையின் கமலம் போத்தி

**முடிவு :**

முன்னேமே மோட்சமது எய்தும் எய்தும்
மூதண்ட சாயுச்சிய முத்தி வாழ்வா
ரன்னேமே ருமனப்பா யின்னூல் பாரு
நவகோடி கோடாகோடி வாழ்ந்தோர் முற்றே. **27**

ருமதேவர் பாஷை பதினெட்டும்
எழுதி முகிந்தது முற்றும்.

**காலம் :**

கீலக வருஷம் பங்குனி மாதம் 7-ந் தேதி அரியாங்குப்பம் நாரராயணசாமி வயித்தியர் சுகஸ்த்த லிகிதம்.

ஸ்ரீராமதேவர் பாதமே துணையுண்டாகவும், வேணும்
திருச்சிற்றம்பலம்

**குறிப்பு :**

இதில், இராமதேவர் பாஷை 18 க்கும் 27 சூத்திரங்கள் இருக்கின்றன. இந்நூல் எழுதியவர் பாண்டிச்சேரி அரியாங்குப்பத்தைச் சேர்ந்தவர். இதில் சிவயோகம், அதீத வித்தை முதலானவற்றைப் பேசுகிருர்.

*வரிசை எண் : 1383.* *சுவடி எண் : 698 (1)*

# இராமதேவர் சோசியம் பத்து

*ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகவும் பழுதுபட்டநிலை. பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 80. அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.*

**தொடக்கம் :**

*ஆதியிலே வேதியன்முன் அன்பாய்ச் சொன்ன*
*அருமறையின் பொருளான சோசி யத்தை*
*சாதியிலே முதலானுர் மனவாக்கியம் தவருமல்*
*சற்குருவின் ... ... ... ...போத்தி*

**முடிவு:**

*தாமென்ற சனியாண்டு ரெண்டரையாய் நிற்கும்*
*தயவான வியாழமோ ராண்டு நிலையாகும்*
*நாமென்ற நாகங்க ளிரண்டும் ரெண்டரையாம்*
*நடுவான கிரகநிலை நலமறிய முற்றே. 11*

*ருமதேவரருளிச் செய்த சோசியம் பத்து*
*மெழுதி நிறைவேறியது.*

**காலம்:**

*கீலக வருஷம் பங்குனி மாதம் 8-ம் தேதி அரியாங்குப்பம் நாராயணன் சுகஸ்த்த லிகிதம்.*

**குறிப்பு :**

இதில் சோதிடம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 1384. சுவடி எண் : 698 (ஐ)

# இராமதேவரருளிச்செய்த பெருநூல் ஆயிரம்

ஏடுகள்: 143(205-347). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8 வரிகள். கி. எண்ணிக்கை : 6000.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

அண்டமெனுங் கேசரியாள் பாதங் காப்பு
அருள்பெருகும் பூரணத்தி னறிவே காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
குருவான பராபரத்தின் குணமே காப்பு
மண்டலங்கள் மூன்றுமொன்றாய் நிறைந்து நின்ற
மகத்தான ரவிமதியின் சுடரே காப்பு
பிண்டமெ்மனும் பொருளான அண்ட பிண்டம்
பேரண்டம் நிறைந்தகண பதியே காப்பு. 1

**முடிவு:**

வாதகலும் ஞானமுறும் வசிய மாகும்
மகத்தான பூரணமும் பூரணமே யாகி
நாதமுடன் நாதமதா யொடுங்கி நின்ற
நாதாந்த சிவயோகிப் பாத முற்றே. 1000

ராமதேவரருளிச் செய்த வாத காவியம் ஆயிரமும்
எழுதி நிறைவேறியது.
குருவே துணை

**காலம்:**

சவுமிய வருஷம் சித்திரை மாதம் 11-ம் தேதி மந்தவாரம் மதியம் ப னி ரெ ண் டு மணிக்கு முடிந்தது. அரியாங்குப்பம் நாராயணசாமி சுகஸ்த்த லிகிதம்.

**குறிப்பு :**

இதில், வெள்ளைக்கல் அண்டம், கற்பூரக் கட்டு. துருசிச் சுண்ணம், யோகநிலை ஞானம், திருமூலர் மார்க்கம், சட்டைமுனி மார்க்கம், போகநாதர் மார்க்கம், கருவூரார் கொங்கணவர் மார்க்கம், சுந்தரா னந்தர் மார்க்கம், மச்சமுனி மார்க்கம், இடைக்காட்டார் மார்க்கம்,

அழுகண்ணிச் சித்தர் மார்க்கம், சிவவாக்கியர் மார்க்கம், வாசுதேவர் தெரிசனம், திருமூலர் தெரிசனம், போகனுதர் தெரிசனம், சுந்தரானந்தர் தெரிசனம், மச்சமுனி தெரிசனம், இடைக்காட்டார் தெரிசனம், பிரம முனி முறை, பரப்பிரம்ம பீடம், மானிடர்கள் செய்யும் கிரிகை முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1385. சுவடி எண் : 698 (D).

# இராமதேவரருளிச் செய்த சிவயோகம் இருநூறு

ஏடுகள்: 29. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 1200.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

**சிவசக்தி பூசை**

மூலமெனு முதற்பொருளாய் முத்தி நடுவணையில்
மூதண்ட மானதொரு பிர்ம்மத்துக் கப்பால்
ஞாலமெனுந் தலமுடைய சத்திபதி மேலே
நாதாந்தப் பெருவெளியின் கீழே

**முடிவு:**

பத்தாசை கொண்டுமன மவுன மாக
பதிவாக சிவயோக மிருனூறு பாரு
வித்தான விரையமது அத்துப் போகும்
மேலான சிவயோகம் விளங்கு முற்றே. 200

இராமதேவர் சிவயோக மிருனூறும்
எழுதி முகிந்தது முற்றும்.

**காலம்:**

சவுமிய வருஷம் சித்திரை மாதம் (?) மங்கள வாரம் மக நட்சத்திரத்தில் அரியாங்குப்பம் நாருயணன், படிக்கின்ற சாஸ்த்திரம் சுகஸ்த்த லிகிதம்.

இராமதேவர் பாதம் கதியுண்டாகவும்

**குறிப்பு :**

இதில் சிவசக்தி பூசை, குருநிலையறியவும் பூசை விழி சக்கரம், ஆசான் மகிமை, பூரணவிலாசம், அண்டசற்பம், கட்டுக்கொடி மை, பூரக்குழம்பு வேதை, நூல் தொகுப்பு பார்க்கும் முறை, மதியமுர்தம், கற்பத்துக்குப் பத்தியம், அரிதாரச் சுன்னம், அயக்களங்கு முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1386. சுவடி எண் : 698 (௦)

# இராமதேவர் அருளிச்செய்த பலதிரட்டு ஐந்நூறு

ஏடுகள்: 69(377-445.) ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். கி.எண்ணிக்கை: 2100. அளவு: 42 X 3 சென்டி மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஆதியந்த மெய்நிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் அறிவில் கூடி
பாதியா முப்பொருளு மூன்று மொன்றாய்
பரைவெளியாய் நின்றபரா பரையின் பாதம்

**முடிவு:**

செய்யாதே தீவினைதான் கொடிது பாவம்
செந்துவெல்லா மீசனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தைப் பணிந்து போத்தி
விளங்கினேன் கருக்கிடை சூத்திரந்தான் முற்றே. 523

முற்றும்

**காலம் :**

சவுமிய வருஷம் வைகாசி மாதம் 18-தேதி மங்கள வாரம், ஸ்ரீமதேவர் பலதிரட்டு சூத்திரம் 523. அரியாங்குப்பம் குட்டைய திருமணி குமாரன் நாராயணசாமி யெழுதின சுகஸ்த்த லிகிதம்,

குருபாதமே துணையுண்டாகவும்.

குறிப்பு:

இதில் சவுக்கார வழலை, வெடியுப்பு, கடுங்காரம் செயநீர், ரசக் கட்டுக் குளிகை, துருசுச் சுன்னம், கெந்தக மெழுகு, கருவங்கக்கட்டு, ரசப்பதங்கம், அண்ட வழலை, தங்கச் சுன்னம், அஷ்ட்ட கர்மம், சமித்துகிறிகை, சிமிள் வித்தை, மருந்தீடு முறிய விஷவித்தை முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 365 (b)/D, 727 இராமதேவர் சூத்திரம் 500 போன்றது. அதில் 521 செய்யுட்களிருக்கின்றன ஆனல், எமது சுவடி எண் 324 (e)/D. 640 இராமதேவர் சூத்திரம் 215 என்ற தலைப்பிலும் தொடக்கம் முடிவு ஒன்ருக உள்ளன,

---

வரிசை எண் : 1387 சுவடி எண்: 698 (p)

# இராமதேவர் வகார சூத்திரம் பத்து

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 50.
அளவு : 42 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

காணப்பா யேரியிலே விளைந்த பிண்டம்
கடிதான மாங்கிஷத்தோ டெடுத்து வந்து
பூணப்பா பொரிக்காரம் பொரித்துக் கொண்டு
பிண்டத்தை வாய்பிளந்து அதனுள் போட்டு
ஆணப்பா பெண்ணோடே கூடி ஞப்போல்
அப்பனே ஞதமங்கே யிரங்கும் பாரு
தாணப்பா லோகத்தோர் சட்டி யொன்று
சாதகமா யிணங்கனையு மதியிலே போடே 1

முடிவு:

நாடெல்லாந் திரிந்தாலு மிந்தப் போக்கு
நல்லமுறை யிதுபோலே யெங்கு மில்லை

பாடல்போல் சொன்னதென்று யெண்ண வேண்டாம்
பாருமே சூத்திரத்தின் பாடல் முற்றே.

முத்தும்

அரியாங்குப்பம் நாராயணசாமி சுகஸ்த்த லிகிதம்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், வாதம் செய்வதற்கான சிப்பி, செயநீர் முதலியன கூறப்பட்டுள்ளன. இது எமது சுவடி எண் 289 (a)/D. 513 போன்றது. பாட வேறுபாடுகள் நிறைய உள்ளன.

---

வரிசை எண் : 1388. சுவடி எண் : 699 (a)

## அகத்தியர் அட்டவணை வாகடம்

ஏடுகள் : 160. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 5000.
அளவு : 37 × $3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம் :**

அகஸ்த்தியமுனி அருளிச்செய்த அட்டவணை வாகடம் குறி தெரிஞ்ச புண்ணியவான்கள் அறிந்து செய்தால் விஷையங்கள் சரியாயிருக்கும்.

**நிலவாகை கற்பம்**

நிலவாகை சற்மூலமு கொண்டுவந்து நிழலுலத்தி
பொடிசெய்து குடுக்கையில் அடைத்துக் கொள்ளவும்.

**முடிவு :**

மாருத பிரமியங்கள், சூலை, அக்கினி மாந்தம், வாயியூறல், பித்தம், சுக்குரவாயுவு, அண்டரோகம் யிவையெல்லாந் தீரும். பத்தியம் கறிப்பு, புளிப்பு, புகையிலை தள்ளவும். இந்த லேகியத்தைப் புதுக் கலையத்தில் அடைத்து வைக்கவும்.

**காலம்:**

இந்த அட்டவணை வாகடம் ஆங்கீர வருஷம், வையாசி மாதம், சோமவாரம் சதுர்த்தேசி உள, பூச நட்சத்திரம் $1\frac{1}{2}$ நாழிகைக்கு தாத்தாச்சாரியார் சிஷ்சையாகிய-சாத்தாப்பாடி வெண்ணுமாலை அய்யர் வம்முஷமாகிய முத்துசுவாமி அய்யர் குமாரன் சின்னய்யர் வாசிக்கிற வாகட பொஸ்த்தம். யிது சரமணந்தோப்பு முகட்டில் எழுதி முடிந்தது.

சாரதாம்பாள் துணையாகவும்
சின்னய்யர் கைஒப்பம்

**குறிப்பு :**

இதில், 127வது ஏடு இல்லை இதில் ஆவாரை கற்கம், தேத்தாங் கொட்டை கற்கம், யெட்டி மாத்திரை, அழுத்துவாய்க் கட்டைக் கனுபானம், கண்டாமிருகத்துக் கனுபானம், கண்டங்கத்திரி லேகியம், மேகவெட்டைக்கு எண்ணெய். சகலவிப்புருதிக்கு, டண்ணுச்கு கிரந்திக்கு எண்ணெய் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1389. சுவடி எண் : 699 (b)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 40. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 1000.
அளவு : 37 × $3\frac{1}{2}$ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர் முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

**சகலமேகத்துக்கு மருந்து**

ஆவாரையிலையை அரைத்து வாழையிலையில் வைத்து சுட்டு தேனிலே பாக்களவு உள்கொள். குணமாகும்

**வேறு**

நெய்சட்டிவேர் நல்லெண்ணெயில் எரித்து காதுக்கு வாற்கவும்.

முடிவு :

கார்போக அரிசி பரங்கிப்பட்டை
செங்கதாரிப்பட்டை நேர்வாளம்
உள்ளி வசம்பு வகைக்கு வராகனெடை 1
அரைத்துக் கரைத்து மெழுகுபதத்தில்
வடித்து ஒருகரண்டி குடுக்க பதினெட்டு
கரப்பானும் சூலைக்கட்டு, கிரந்திகள், தீரும்
இச்சாபத்தியம்.

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில் வெவ்வேறு வைத்தியங்கள் உள்ளன. சகலமேகத்துக்கு மருந்து, செவுட்டுக்குப் புகை, சகல ரெத்தக்கழிச்சலுக்கும் மருந்து, பிறவாத யிசுவுக்கு, கழுத்து யிசுவுக்கு, தயிலம், லிங்க குன்மம் தேங்கா லேகியம் முதலியன உள்ளன.

இரண்டு ஏடுகளில் மோட்சதீபச் சிலவுக் கணக்குகள் உள்ளன.

---

வரிசை எண் : 1390. சுவடி எண் : 700 (f)

## அகத்தியர் சூத்திரம்--பதினாறு

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 18 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

பூரணமாய் நின்றதொரு அய்யர் பாதம்
போத்தியே யென்னுளும் புவியின் மீது
காரணமாய் நின்றதொரு ஆயி தன்னைக்
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பாரு
ஆரணமாம் ஆகாசம் லோகம் லோகம்
அடுக்கடுக்காய் நின்றதொரு அறையைக் காண

வாரணத்தின் முகத்தோன்றன் பாதந் தன்னை
மனதில்வைத்து என்னாளும் மகிழ்ந்திட் டேனே. 1

**முடிவு:**

வாசிப்பாய் தோத்திரவு கோடா கோடி
மனோன்மணியே மாதாவே மலையின் கண்ணே
யோசிப்பாய் மந்திரங்க ளனந்தங் கோடி
உத்தமியாள் பதபூசை யுகந்து தானால்
ஆசிப்பாய் அதின்பிறகு ஆத்தா ளந்த
ஆனந்த பூரணத்தில் அருமை தானே. 17

சிவமயம்
குருவே துணையாகவும்

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், மாய்கை, பொய், சோபம் மூன்றையும் தள்ள வேண்டும், வேதாந்தம், பின்பமென்ற மூன்றெழுத்து, ஐந்தெழுத்து, முப்பத்திரண்டு பேரின்பம், பஞ்சாட்சர விளக்கம் முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1391. சுவடி எண் : 701

# சில வாகட முறைகள்

ஏடுகள்: 31. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5-8 வரிகள். கி. எண்ணிக்கை : 500.
அளவு : $21\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

கெந்தகம் துரிசு விராகனெடை 1
நவச்சாரம் சதுரக்கள்ளிப்பால்
வெங்காரம் கொண்டுவந்து பூனீறு
அரிதாரம் அதிலே போட்டு

வகைக்கு விராகனெடை—1 90 நாழிகை வச்சு
தெளிந்தவுடனே அந்த நீர் விட்டு

முடிவு :

**ரசக்குளிகைக் கட்டு**

ரசம் சுத்திபண்ணி விராகனெடை 10யெடுத்துத் துளசிச் சாறும் குப்பமேனிச்சாறும் சுருக்கு குடுத்து கய்யான் தகரைச் சாறும் குப்பமேனிச் சாறும் விட்டு ரெண்டு சாமம் அரைத்து துளசியிலை சாறு, மாகாணி யிஞ்சி யிலைச்சாறும் மாகாணி, சுன்மைச்சட்டி சாறு மகாகாணி . . . . . . . . . . . . . . . .

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், குருமுறை, கிண்ணிமுறை, செப்பு நெருஞ்சி வகை செந்தூரம், தாம்புர சுத்தி, சாதிலிங்கக்கட்டு மெழுகு, மனோசிலைக்கட்டு துத்தக்கட்டு விபரம், தலைமுடிச் சுன்னம், அண்டச் சுன்னம், நாகரச பற்பம், வெள்ளீயப்பானம், ரச செந்தூரம் முதலான தலைப்புக்கள் உள்ளன.

———※———

வரிசை எண் : 1392. சுவடி எண் : 702

# அகத்தியர் வைத்தியர்--ஆயிரத்தைந்நூறு

ஏடுகள் : 240. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 10000.
அளவு : 34 × 4 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

வாகுடன் கிணேசன் பாதம்
பணிந்துமுக் குணங்க ளாக
வாகடச் சுவடி யெல்லாம்
வகைவகையாய்த் தொகுத்துப் பார்த்து

ஆகம விதியி னூலா
    லடர்ந்திடும் நோய்கட் கெல்லாம்
போகநல் மருந்து சொல்வோம்
    புலத்தியாப் பொருந்திக் கேளே. 1

முடிவு :

ஆமப்பா புலத்தியனே சொர்ன்ன கால
    வயிரவத்தை யறையுரேன் நன்முய்க் கேளு
வாமப்பா தங்கமிரண்டு களஞ்சி தன்னை
    அகலமாய் லேசாகத் தகடு தட்டி
ஆமப்பா சாதிலிங்கம் களஞ்சு நாலு
    அதுவுடனெவட் சவ்வீரம்வெண்காரம் மணியம் வாங்கி
ஆமப்பா சுத்திசெய்த தகட்டுக் குள்ளே
    . . . . . . . . . . . . . . . . . . . . . . . 1486

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், சூதசுத்தி, கெந்தக சுத்தி, மனோசிலை சுத்தி, தாளக சுத்தி, தாம்பூர சுத்தி, நேர்வாள சுத்தி, மண்டூரச் செந்தூரம், பூபதிமாத்திரை, மாமேக ரசம், முசல் நெய், வாயில் மூக்கில் ரெத்தம் விழுகிறதுக்கு நெய், சன்னி வகைக்கு கலிக்க மாத்திரை, பரங்கிப்புண் குஷ்டம், வெட்டைக்கு ரசாயனம் முதலியன உள்ளன,

இது, எமது சுவடி எண் 301 (*h*)/*D*. 5›9 போன்றது.

---

வரிசை எண் : 1393. சுவடி எண் : 703(a)

# நாடிப் பரீட்சை

ஏடுகள் : 11. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-9 வரி க ள். கி. எண்ணிக்கை : 500.
அளவு : 37 × 4 சென்டி மீட்டர்- எழுத்து : மணிப்பிரவாளம்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றும்

**தொடக்கம்:**

கராம்ஸ ஷ்டேஷு மக்ர மூலேஹஸ்புட....
பரீட்சணம் வாத பித்தாதி ரோகாணும்
சாத்யா அசாத்யஞ்ச ச்ருதனுது என்றது

**முடிவு :**

**சன்னிபாத ஜ்வரம்**

இது இரண்டுங் கூடப் பத்து. இந்தப் பத்தும்
.............சொல்லப்படும் என்றவாறு.

**காலம் :**
இல்லை

**குறிப்பு :**

இது, மணிப்பிரவாள நடையில் வடமொழியும் தமிழுமாக, கிரந்த எழுத்தும் தமிழெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

இதில் வாதஜ்வர லட்சணம், பித்தஜ்வர லட்சணம், சன்னிபாத ஜ்வரம் முதலியன சொல்லப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1394. சுவடி எண் : 703 (b)

# சதசுலோகீ--ஜ்வர சிகிர்சா

ஏடுகள் : 14. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு: 87 × 4 செண்டி மீட்டர். எழுத்து: மணிப்பிரவாளம்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஸ்ரீநாத......ஜ்வராதி.............
..........ஜ்வரஸ்யா ஆமுஸ்தா பற்பட
தன்யாஷ்ட்டய.........விஷ்வா.

**முடிவு :**

அக்னிகோடி வேலி ஜம்பூத்ரும....பர்வனரிணுவல
இவையள் வயற்று விப்புருதியைச்
சமிப்பிக்தம்

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், 12 முதல் 21 வரை ஏடுகள் இல்லை.

இதில், வடமொழியும், தமிழும் கலந்து கிரந்தம் தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன.

இதில், சீதசுரம், ரத்தபித்த சிகித்சா, ப்ரதா சிகித்சா, அஸ்திஸ்ராப சிகித்சா, அரோசக சிகித்சா, கிரகணி சிகித்சா முதலியன கூறப்பட்டு உள்ளன.

---

வரிசை எண் : 1395. சுவடி எண் : 703 (c).

# சந்தனாதித் தயிலம் முதலியன

ஏடுகள்: 16. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 700.
அளவு : 37 × 4 சென்டி மீட்டர். எழுத்து : மணிப்பிரவாளம்
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம் :

**உசிர சந்திரனாதித் தைலம்**

உசிரம் சாரிப..................
சைவாமுக்தாமலக சம்யுதம் கலுசித......
சைவாக்ரி பேரஞ்ச இனம் ததா
அஷ்வ கர்வ பலா பில்வ மபுண்யரீகம்
ததைவ ச.

முடிவு:

ஸ்வயம் ஸ்ரீரஸோ நாம அஷ்டகுல்ம
ஹரம் பரம் அதீதிஷ்டாத ஜாந்த்ரோஹான
நாஷயேந் நாத்ர சம்சய :

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், பலவகை சந்தனுதித்தயிலங்கள் கூறப்பட்டுள்ளன. வடமொழியும், தமிழும் கலந்த, கிரந்தம், தமிழ் ஆகிய எழுத்துக்கள் கலந்த சுவடியாக உள்ளது.

---

வரிசை எண் : 1396. சுவடி எண் : 703 (d)

## குணபாடம்

ஏடுகள்: 5(56-60). ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு :37 X 4 சென்டி மீட்டர். எழுத்து : மணிப்பிரவாளம்
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

எலுமிச்சம்பழத்தின் குணம்

அப்யங்கே அகில நேஹ சௌக்ய ஜனனம்
வைத்யோத்ரி, பேநோவிம்.

முடிவு:

சர்க்கரையின் குணம்

தீப நிஸ்வாச காசாறு நாஸணீ சர்வதோஷ :
தீட்சய ஹரோதீபன : சர்வரோகஜித் ।

காலம்:

இல்லை

குறிப்பு :

இதில், எலுமிச்சம்பழத்தின் குணம், பசுவின் மோரின் குணம், மோரில் மேல் சரக்கு கூடுகிற குணம், இளநீரின் குணம், சர்க்கரையின் குணம் ஆகியவை உள்ளன.

---

வரிசை எண் : 1397. சுவடி எண் : 704

# அகத்தியர் கரிசல் முன்னூறு

ஏடுகள் : 190. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 4 வரிகள். கி. எண்ணிக்கை : 3000.
அளவு : 41 × 2½ சென்டிமீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

பூறண மாமக ளறுள்பு தல்வன்
காரணி மாமதக் கரியடி பணிவாம் 1
அமுற்த மதியணி சடையினர் விடைய
ரேமத களணை யடிபணிவாம்.

**முடிவு :**

வாதமும் பித்தமும் வடிவுடன் நல்லது
காதலாய் விந்து கணக்குட னிறுகும்

யிறுகும் நரம்பு யிதமுடன் பச்சையாம்
குறுகுமே யெல்லாம் குணமுடன் தீரும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், ஈசுபரி வணக்கம் நூதக்கட்டு, சகல நோய் தீர, வாததுகை, அவுடத லக்கணம், குருபத்தி வணக்கம், பாதரசபந்பம், பஞ்சசூத செந்தூரம், கெந்தக பற்பம், அய பற்பம், கோடாசொரி, வீரசெந்தூரம், நவலோக சுத்தி, சீனரச கற்பூரம் முதலியன உள்ளன.

இது, மூன்று பத்திகளாக எழுதப்பட்டுள்ளது. பாட்டெண் இல்லை. பிழைகள் மலிந்து கிடக்கின்றன.

இது, எமது சுவடி எண் 16/D. 18 போன்றது.

---

வரிசை எண் : 1398. சுவடி எண் : 705.

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 115. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—7 வரிகள். கி. எண்ணிக்கை : 1500.
அளவு : 30 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**சச்சி வாய்வுக்கு தைலம்**

தில்லெ தயிலம் வாங்கி மேல்க்குப் பூசவும்: உள்ளுக்குக் குடுக்கவும். வாய்வு விட்டுப் போகும். கய்பி கண்டது. இச்சா பத்தியம்.

**கல்னூர் புஷ்பம்**

கல்னூர் சுண்ணும்பு கொளம்பில் தோச்சி
துணி சீலையில் அடுக்காய் வைத்து சுருட்டி

**முடிவு :**

அரைப்பு கிழசம் சந்ததுள் லவுங்ம் கிழசம் வைத்து ஒரு சாமம் அறைப்பது. சீருப்பிள் போல் குளிகை செய்து சுறங்கஞு சனக்கி தோஷத்த மூலப்பா தேன் அனுபானம் பிளி சுட்டு போடவும்.

**காலம் :**

இல்லை.

**குறிப்பு:**

இதில், சூட்டைப்பத்தின பித்தசன்னி நசியம், தாளிசச் சூரணம், தீபனம், உஷ்ண வாயுவுக்கு, பஞ்சகாச இருமலுக்கு லேகியம், ஸ்ரீகளுக்கு மருந்து, தீராத ரெணமானல் உப்பை பேர்ட வயணம், வெள்ளோக்காளம், பித்தசூட்டினல் மலந்தீய்ந்தால் லேகியம் முதலியன உள்ளன.

வெவ்வேறு கையெழுத்துகள் உள்ளன. மூன்று பத்தியாக சில ஏடுகள் எழுதப்பட்டுள்ளன. பிழைகள் அதிகமுள்ளன.

வரிசை எண் : 1399 சுவடிஎண் : 706

# கியாழ வகைகள்

ஏடுகள் : 9. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது.
பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு : 30 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்
ஆசிரியர் : அறியக்கூடவில்லை முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

கியாழ வகைகள் வருமாறு
சுரங்களுக்கு கியாழம்
தோலைப்பத்தின சுரக்குணம்

காலொடு வயரெ றிந்து
கண்களும் தலையும் நொந்து
பாலொடு பழமுங் கைத்து
நாவது வறண்டு பெத்தும்
மேலுற வெதும்பி யங்கம்
வேர்வைசத் தில்லாமை நொந்து

**முடிவு:**

மாந்த சுரத்துக்குக் கியாழம்

உத்தாமணி யெலே பஸ்பம் பள்ளிவேளைவேர் பொடுதலை
நொச்சியெலே, வெள்ளப் பூண்டு, கறிமஞ்சள்
திப்பிலி வசம்பு பஸ்பம், பள்ளி ஓமம் சும்மா போட்டு
கியாழமிட்டுக் குடுக்க மாந்த சுரம் தீரும்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், சஸ்தியைப் பத்தின சுரத்துக்குக் கியாழம், உதிரத்தைப் பத்தின சுரத்துக்குக் கஷாயம், சுக்கிலத்தைப் பத்தின சுரத்துக்குக் கஷாயம், அஸ்த்தியைப் பத்தின சுரத்துக்குக் கியாழம், வாத சுரத்துக்குக் கியாழம், சுரத்துக்குக் குடிநீர் அரசின் சுரத்துக்குக் குடிநீர் முதலானவை உள்ளன.

சில ஏடுகளில் மூன்று பத்திகளாக எழுதப் பட்டுள்ளன.

வரிசை எண் : 1400. சுவடி எண் : 707.

# பாலகிரகத்துக்கு மந்திரம்

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை.
பக்கத்திற்கு : 5—7 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 31 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

ஓம்—கிரியும்—கிரியும், ரீயும், ரீயும், அய்யும், மய்யும், சவ்வும், சவ்வும், ஸ்ரீரியும், ரீயும்—சிவ—பவா, சிவ—ருத்திரா, சிவ—சுப்பிரமண்ணியா, ஓடிவா—ஓம் சகசிராயுதா, ஓம் வேலாயுதா, ஓம் சூலாயுதா.

**முடிவு :**

மாரண சக்கரம்
உச்சாடன சக்கரம்
வசியசக்கரம் ஆகியவை உள்ளன.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், மந்திரங்கள் சக்கரங்களுடன் உள்ளன.

---

வரிசை எண் : 1401. சுவடி எண் 708.

# அகத்தியர் ஞானம்-நூறு

ஏடுகள் : 32. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 500.
அளவு : 22 × 4¼ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

**தொடக்கம் :**

பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றும் கிரியென்றும் படைத்த வாறும்

காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறும்
கற்பமுண்டோ ரிஷகள் சாகாத வாறும்.

**முடிவு :**

வெளியோடே வெளிசேரு மீருந் தண்ணீர்
விதமான அப்புடனே சேர்ந்து போகும்
மொழியோடே தேய்வுவதிற் சேர்ந்து போகு
முற்றுமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரு
மழியாத வாய்விலே வாயு சேரு
மஞ்சுமொன்றுய்க் கூடினு லாத்துமா வாகும்
வடியோடே யிவ்வற்னைம் அறிந்து கொண்டு
மானிடரே காயசித்தி ஞான முற்றே. 101

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், பதினெட்டு சித்தர்களுடைய பெயர்கள், கும்பிடு சிப்பிச் சுன்னம், பிண்டப் பெருமை, வெள்ளைக்கல் சுன்னம், தங்கநீறு, மணி, வாலை மூன்றெழுத்து, குருமுனிக் குருபூசை, முதலான ரசவாதத்திற்கான மருந்துகள் உள்ளன.

இது எமது சுவடி எண் 324 (ஏ)/D. 642 போன்றது. அதற்கும் இதற்கும் பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

---

வரிசை எண்: 1402 சுவடி எண்: 709.

# சட்டை முனியார் காயாதி கற்பம் நூறு

ஏடுகள் : 34. ஏட்டின் நிலைமை : சற்றே பழுது.
பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு : 22 × 4½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : சட்டைமுனியார். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பாடுகிறேன் காயகற்ப மைங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு

நாடுகிறேன் சித்தருட பாதங் காப்பு
நாந்தாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
தேடுகிறே னென்றுநூ மென்னூல்ப் போலே
செப்பார்கள் காயசித்தி சித்தர் சித்தர்.

**முடிவு :**

பாரப்பா காயசித்தி பண்ணு மார்க்கம்
பஞ்சிட்டுப் பாரம்வைத்தால் போலே சொன்னேன்
ஏரப்பா சித்தர்சொன்ன கற்பத் துக்கு
மென்னுடைய நூலுக்கு மிசைந்து பாரு
தூரப்பா தொட்டல்லோ முடிவரைக்குஞ் சொன்னேன்
சொல்லாம லொளித்திட்டார் சித்த ரெல்லாங்
காரப்பா குருபதத்தைக் கார்த்தால் முத்தி
காயசித்தி பாடினதோரா காட்சி முற்றே. 101

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், வாலை எழுத்து, பூசை, கடுக்காய் சாப்பிட மாசம், கணக்கு, வேப்பன் பட்டை, சுயம் பாட, சிவனுர் வேம்பு கற்பம், தூது வளை, சுன்னம், உப்புக்கட்டு, காந்த கற்பம், முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 26 (a)/D. 43, எண் 351/D. 694, எண் 352(a)/D. 695 போன்றது. பாட வேறுபாடுகள் உள்ளன.

---

வரிசை எண் : 1403 சுவடி எண் : 710.

## வாலை பூசா விதி

ஏடுகள் : 11. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு : 22 × 4½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஆதியந்த வாலை....................
...................தான் பாரு

சோதியந்த நடு....................
......குசு பொயினித் திருந்தார் துரை.

முடிவு:

ஒழிவுதனி லொழிவுதரும் உருதி சொல்ல
உற்பனத்தி லுற்பனமாய் உறுதி தோணும்
வெளியதனில் வெளியாகி நாதத் துள்ளே
விளங்கிநின்று வாலைப்பெண் ஞூதி யாமே. 31

பூசாவிதி பாட்டு 31
குருவே துணை

காலம்:

1861-ம் வருஷம் மே மாதம் முதல்தேதி எழுதி முடிந்தது.

குறிப்பு:

இதில், வாலை பூசை முறைகள், மனமடங்கச் சாதனைகள், பூரணத்தின் மகிமை, தேவி பூசையின்றி வாதம் சித்தியாது முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 226 (f)/D.362 போன்றது. பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன.

---

வரிசை எண்: 1404. சுவடி எண்: 711

# கொங்கணர் ஞானம் பதின்மூன்று

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை
பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை: 80.
அளவு: 22 x 4½ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

விளம்புரேன் பூரகந்தான் முப்பத் திரண்டு
மேலான கும்பகந்தான் அறுபத்து நாலு
விளம்புரேன் ரேசகம்தான் பதினு றுக
விருதான மாத்திரைக ளறியச் சொல்வேன்.

முடிவு :

வாளப்பா சட்டைமுனி கற்ப நூற்றில்
வகையாக எறுதுரைப்பா ராக்கஞ் சொன்னூர்
ஆளப்பா அப்படியே அண்ட மட்டும்
அவர்சொன்ன.................கொண்டு தேரே. 13

குருவே துணை

பொத்தகம் முற்றிற்று

ஸ்ரீராம செயம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பிராணயாமம் பற்றிய செய்திகள் முதலியன கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1405 சுவடி எண்: 712

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 233. ஏட்டின் நிலைமை : சற்றே பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 2500.
அளவு : 16½ × 2 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

மேக எண்ணெய்

லிள(க்கெண்)ணெய் சேர் 4. பூவற பட்ட..............ர் 4. சங்ககுப்பி சாா் சேர் 4. இவை கூட்டி, கிளி மூக்கு கிழங்கு பலம் 4 கருஞ்ச...ற்கம்.

முடிவு:

சூலை............வாயிவு யிதுகளுக்கு ஒரு காசியிடை யெண்ணெயில் பச்சைத் தண்ணி நாலு சொட்டு விட்டு கொடுக்கவும் நல்லா பேதியாகும். பேதியானதுக்குப் பிறகு ரசமும் சாதமும் கொடுக்கவும்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், ஆக்கிராணம், பேதிக்கு சண்டமாருதக் குழம்பு, சண்டமாருத செந்தூரம், அண்ட வாதத்துக்கு, விரைவாதத்துக்கு, மண்டூர செந்தூரம், கபாட லேகியம் கிருணிக்கு, கண்டங்கத்திரி நெய், பித்த குன்மத்துக்கு மருந்து, பேதி மாத்திரை, அண்ட பசுப்பம், குமரித் தயிலம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1406. சுவடி எண்: 713

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 26. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது.
பக்கத்திற்கு: 5-6 வரிகள். கி. எண்ணிக்கை: 250.
அளவு: $16\frac{1}{2} \times 2$ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

**ஊழிபேதிக்கு மருந்து**

கேளப்பா ஊழியென்ற காத்துச் சொல்வேன்
கெடியான சாமளா தேவி யாலே
காளப்பா மயில்போலே கருத்து நிற்கும்
கண்ணுக்குத் தோணுது கடினம் மெத்த

**முடிவு:**

**பேதிக்கு சாப்பிட எண்ணெய்**

தேங்காயி நாலுகாயி பாலுபிழிந்து வைத்துக் கொண்டு
நேர்வாளம் பறுப்புலே யிந்த தேங்கா பாலே விட்டு
அரைத்து சட்டியில் போட்டு மீதி பாலையும்
மெதக்கவிட்டு அடுப்பில் வைத்து யெரித்து யெடுத்து
வடிகட்டிச் சீசாவில் வைத்துக் கொண்டு.

**காலம்:**

இல்லை

குறிப்பு :

இதில், ஊழி பேதிக்கு மருந்து, கருவங்கபற்பம், காரியம், செந்தூரம் வங்கபற்பம் வாந்தி பேதிக்கு மாத்திரை, கண்ணுக்கு கலிக்கம், பூரபற்பம் தண்ணீர் தாகத்துக்கு குடிநீர், காது மந்தத்துக்கு, மூலத்துக்கு, சூலைக்கு மருந்து, சுரத்துக்கு பஸ்ப்பம், கண்ணுக்கு கலிக்கம், பேதிக்கு சாப்பிட எண்ணெய் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1407. சுவடி எண் : 714

## சண்முக பூசை--முப்பது

ஏடுகள்: 14. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை
பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு: 16½ × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : புலிப்பாணி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஆதியாஞ் சிவனுமையு மரையுநு காப்பு
அரியயனு குலிசனெடு கிணேசன் காப்பு
வீதியாஞ் சண்முகத்தின் பூசை மாற்கம்
விளம்புகிறேன் சக்கரத்தின் தியானந் தானும்
நீதியாந் திசையுடனே மணிகள் விசித்திரம்
நிச்சயமா பலகையுட னதக தோணும்
சாதியாங் கருமமெட்டுஞ் சமத்து ஓம்
சாற்றுகிறேன் போகரிட பாதங் காப்பு. 1

முடிவு :

பரமேநீ துவாபறியுகத்தில் போக னுதர்
பண்புடனே பூசைசெய்து பணிந்தார் பாரு
நோமேநீ யிந்தகலி முப்ப துக்குள்
கொற்றவனே புலிப்பாணி பணிந்த னப்பா 31

சண்முகத்தின் பூசை மார்க்கம்
முற்றிற்று.
வடிவேல் துணையாகவும்
தேவிசகாயம்

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில்,அறுகோண சக்கரத்தின் பெருமையும், எந்தெந்தக் காலத்தில் யார் யார் பூசித்தனர் என்றும், அதன் பலன் இன்னதென்றும் கூறப் பட்டுள்ளன.

இதன் பின், ஒரு ஏட்டில் சக்கரங்களுடன் மந்திரங்கள் எழுதப் பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1408. சுவடி எண் : 715

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 13. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டது.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 250.
அளவு : 12 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**சூதக வாயுவு**

சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு நாற்களஞ்சி
துலங்கியதோர் திரிகடுகு காந்த முள்ளி
காயமா யித்துடனே யிந்துப்பு கழல்பருப்பு தானும்
யிதமாக ஓரொன்று களஞ்சாய்க் கொண்டு

**முடிவு:**

அரையாப்புச் சூலை சொல்லாத வேதையிட்டால்
யேழுமாத்து சுருக்காகாச பற்பம்சேர்த்துக் கொண்டால்
கல்லான வியாதியெல்லாந் தீர்ந்து போகும்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் கண்டு பாரே.

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

**இதில், சூதக வாய்வு, குன்மம் திரட்சிக்கு, வீரக்கட்டு, லிங்கக்கட்டு உப்புக்கட்டு, தாளகக் கட்டு, அயச்செந்தூரம், பல் வலிக்குக் கிஷாயம்**

தலையிடிக்கு நசியம், பவளபற்பம், குழந்தைகளுக்கு பிரளிநோய்க்கு எண்ணெய், வெள்ளைக்கு, துவாலைக்கு, தாம்புரபற்பம், காலாக்கினி ருத்திரன், வெட்டைக்கு, முதண்டகிஷாயம், அரிதாரபற்பம் ஆகியவை உள்ளன.

---

வரிசை எண் : 1409. சுவடி எண் : 716

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 30. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 500.
அளவு : 12 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

(இர)ண்டு சாமமரைத்து அயச்சிமிளி...............
வைத்துக்கொண்டு, சுரத்துக்கு சுக்கு சித்திரத்தை
யிலிடவும். 13 சன்னி, 7 தோசத்துக்கு அரத்தை
சுக்கு கிரும்பு திப்பிலி யிஞ்சி (மாவி)லிங்க பட்டை
வேலை காட்டாமணக்கு.

**முடிவு :**

காயவைத்து கீழே யிரக்கி வைத்துக் கொண்டு பொடியை அரைக்கால் நாழி வருத்து குடுக்கையிலடைக்கவும்.

குன்மம் பீலிகை சூலை தீரும். தூரம் யில்லாது உண்டாகும். பணவிடை கருப்புட்டியிலூட்டி அண்ணுக்க முழுங்கவும்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், முதல் ஏடு இல்லை. இதில் !வாதத்துக்கு அஞ்செண்ணைத் தயிலம்,வில்வாதி குளம்பு,தந்த ரோய்க்கு,மேகம்,கிரந்தி, அரையாப்புக்கு பார்வை, திருஷ்ட்டி, ஏவலுக்கு, யீட்டு வகை, பெரிய கலிக்கம், சகல சந்நி பிரவீச்சுக்கு முதலியன உள்ளன,

---

வரிசை எண் : 1410. சுவடி எண் : 717

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 94. ஏட்டின் நிலைமை: பழுதுபட்டநிலை.
பக்கத்திற்கு : 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 1500.
அளவு : 12 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

நீலகண்ட மந்திரம்

அங் கிலிங் சிங் நசி நசி.
ஓம் பிறீங் இறீங் சிம.
இது அமாவாசியில் 25000
**நீலகண்ட அபிஷேகத்துக்கு மந்திரம்**
ஓம் கிலி என்று செபிக்கவும்.

**முடிவு :**

மூணுசாமம் அரைத்து புடம் போடவும்,
இப்படி குரைச்சு அஞ்சுபுடம் போட
பற்பம் கபவிதி 20-ம், சலரோகம் 21-ம்
தீரும்-தேனில் கபத்துக்கு............கும்
இச்சாபத்தியம்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், நீலகண்ட மந்திரம், சண்டமாருத செந்தூரம், 'சண்முகம் சொன்னது', கருவுை மை, சவ்வீர மை,பேய் தோண அஞ்சனம்,' மகுடி அடைக்க, நாய், பாம்பு வாய் கட்ட,மச்சமுனி ஞயன் 800-த்தில்,காலாங் கினி ருத்திரன், வங்கபற்பம் முதலியன உள்ளன.

இடையிடைய மந்திரங்களும் சக்கரக்களும் உள்ளன. தெலுங்கு எழுத்துக்கள் சக்கரத்தில்-எழுதப்பட்டுள்ளன.

——

வரிசை எண் : 1411 சுவடி எண்: 718(a)

# புலத்தியர் ஞான கற்பம்--முன்னூறு

ஏடுகள் : 20. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8—9 வரிகள். கி. எண்ணிக்கை : 400.
அளவு : 15 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : புலத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

(சீரு)லாவிய தென்பொதிகையில் வாழ்
மேருசூ ழகற்றீச ரருளினால்
(கா)ருறு புலத்தீசர் விளங்கிய
கார்மதம் பொழியானைப் பணிகுவாம். 1

**முடிவு:**

விளையுந் தகடா கிதமும்
வெண்ணப்பி ரேகம் போலாங்
களைய தீதம் பதினாறு
காந்திமதி சூழும்
குளையெனவும் குப்பிதனில்
கொண்டதனைத் தாக்கி
முளையெனவுஞ் சூட்டிமிக
முத்தமதில் வையே. 109

புலத்திய ரருளிச் செய்த ஞானகற்பம் முன் ஞானம் 109
முற்றும்
சிவா

**காலம்:**

பிரமாதீச வருஷம் பங்குனி மாதம் 28-ந் தேதி வெள்ளிக்கிழமை

**குறிப்பு :**

இதில், தலைப்புப் பக்கம் சிதைந்துள்ளதால் தலைப்புக்கள் தெரியவில்லை. ஏடுகளும் மிக மிகப் பழுதுபட்டு படித்தற்கியலாத நிலையில் நடுவில் உள்ளன.

—❋—

வரிசை எண் : 1412. சுவடி எண் : 718(b)

# புலத்தியர் மெஞ்ஞான கற்பர்--பின்னூறு

ஏடுகள்: 22 (21-42). ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 400.
அளவு : 15 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : புலத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

முத்திதரு ஞானவீதி மூலச் சுழிமீதில்
சத்தியபி ராமியருட் சதுர்க்கமல பீடம்
பெற்றியருட் மத்தகெஜ சித்திரமணி வாசல்
நித்தமலர் பொழியறவி நிற்மலமுங் காப்பாம் 1

**முடிவு :**

ஆத்திடும் புதம்ஜயஞ்சு மாத்தாஞ்
சூத்திர மாகுஞ் சுணங்கன் விருஷம்பால்
போத்திடு முன்பு கழிந்த செய்கைதான்
மா........................... 107

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில் கடைசி ஏடு இல்லாததால் முற்றுப் பெறவில்லை. இதிலும் தலைப்புக்கள் ஒடிந்துள்ளன.

வரிசை எண் : 1413. சுவடி எண் : 719

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 19. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு : 18 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

வேதாந்திப் பெரிய தம்பியாருடைய
பாதமே கெதியாகவும்

**ஆவாறம் எண்ணெய்**

ஆவாறம் பூவு
ஆவாரம்பட்டை
ஆவாரம்பிஞ்சு
ஆவாரம் இலை

இது மூன்றை(?)யும் பயிர்போல் நறுக்கி உரலிலிட்டு இடித்து புடைத்து தூளாயிடித்து 6 படி தண்ணீர்விட்டு, மருபடி முன் சொல்லிய தூளை அதிற் போட்டு

**முடிவு :**

பொடலன் முதுவக்காய், தொவரன் பருப்பு, கொடுக்கால்புளி, எலுமிச்சம்பளம், வருத்தஉப்பு, $\frac{1}{2}$ மண்டலம் உற்கொள்ளவும்.

21-ம் நாள் தலைக்கு நல்லெண்ணெய் தேய்த்து சீயக்காயில் தலைக்கு யிடவும்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், 7-வது ஏட்டில், அகஸ்த்திய மாமுனியினருள் பெற்ற பாதமே துணை, வால சுப்பிரமணியருடைய பாதமே துணை. என்றுளது. பின்புறம், இது மகாராஜராஜ ஸ்ரீ மாணிக்க வயிதீக-வெ-மாரிமுத்து யென்பவருடையது. சரஸ்வதியம்மன் துணையாகவும் என்றுளது.

அடுத்த ஏடுமுதல் மேகத்துக்கு, ஜெயத்துக்கு, துன்மார்க்க வியாதிக்கு துன்மார்க்கமான வியாதிக்கு பேதி முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1414. சுவடி எண் : 720

# கொங்கணர் கடைப்பிள்ளை நவக்கிரக கக்கிஷம்

ஏடுகள் : 17. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 6-8 வரிகள். கி. எண்ணிக்கை : 600.

அளவு : 36 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஆதியென் மூலமந்திர மரியென் றோதி
 அறிந்தபின்பு நவக்கிரக கக்கி ஷத்தை
நீதியுடன நீ குருவாய் விளங்க வேண்டி
 நிலையறிந்த கொங்கணவர் பாதம் போற்றி
ஓதியதோர் மந்திரகலைக் கியான மான
 உண்மையென்ற வேதபூ ரணமே காப்பு.

**முடிவு :**

நன்மையுள்ள நாட்டமதாய் நயநம் பாத்து
 நயனமென்ற கண்ணெறிந்து விண்ணை நோக்கித்
தன்மையுடன் தன்ன(றி)வே தாஞ மென்று
 தின்றெளிவும் விண்ணெளிவும் ஒன்றாய்க் கண்டு
சின்மயமும் தன்மயமு முண்மை யாகத்
 தெளிந்துசிவ சிவமயமாய்த் தெளிவாய் முத்தே.

குருபாதமே கெதி.
முற்றிற்று.

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், 2-ம் ஏடு தொடக்கத்தில் ஒடிந்துள்ளது. இது சோதிடத்தைச் சாரும். அகத்தியர் நவக்கிரக கக்கிஷத்தின் வேருயது. இதில், மூக்கு, மூக்கு, காது, காது, மூலம் மூலம் என்ற தொடர்கள் காணப்படுகின்றன. நூல் முழுவதுமிருக்கிறது. கர்க்கசம் என்பது கக்கிஷம் என்ருயிற்று.

முதல் ஏட்டில், இதில் சகாப்தம் கூட இருக்கிறது. குதிரையடி என்றுளது.

---

வரிசை எண் : 1415. சுவடி எண் : 721

# கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம்-அறுபது

ஏடுகள் : 31. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5-6 வரிகள். கி. எண்ணிக்கை : 450.
அளவு : 21½ × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : கொங்கணர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஆதியந்தங் கடந்துநின்ற பூரணந்தான் போத்தி
அம்மனோடு மூலத்திற் கிணேசன் காப்பு
பாதியிந்து மலர்கடந்த மூலர் காப்பு
பரமாகி யடியிருந்த போகர் காப்பு

**முடிவு:**

உள்ளபடி முப்பாழுக் கப்பால் நின்ற
ஓகோகோ சுருதிமுடிந் திட்ட வாறு
வள்ளலே பூரணத்தின் தீட்சை சொன்னேன்
வளமான கனியொன்றும் கனிந்த முற்றே. 61

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், மனம் அடங்கும் முறை, வழலை முறை, வழலை செய்முறைகள் சவர்க்காரம் செய்முறைகள்-உவர்ச்சாரம் எட்டு விதம், கல்லுச்சுன்னம் மச்சமுனி தீட்சை, கும்பமுனி தீட்சை, ஆறு தீட்சை, சிவ தீட்சை, சத்தி தீட்சை, மௌனதீட்சை, போலி குருக்கள் முதலியன கூறப்பட்டுள்ளன. மேலும், குருக்கள் லட்சணம், அவரில் போலி, புவனேசுவரி தீட்சை, திரிபுரை தீட்சை, சியாமளா தீட்சை, அம்பிகா சக்தி தீட்சை, வல்லபை தீட்சை, மயேசுவரி தீட்சை, ஆருதார தீட்சை, சமாதி தீட்சை முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 234 (*b*)/D. 387 போன்றது.

வரிசை எண் : 1416. சுவடி எண் : 722

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 94. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி. எண்ணிக்கை : 800.
அளவு : $11\frac{1}{2}$ × 2 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**லிங்க மெழுகு**

| | | | |
|---|---|---|---|
| லிங்கம் | பலம் 1 | ரசசெந்தூரம் பலம் | 1 |
| இந்துஉப்பு | ,, 1 | வெங்காரம் ,, | 1 |
| வாளம் | ,, 1 | ஆமண பற்பம் சரியிடையாயி | |
| காந்தம் | ,, 1 | கல்வத்தில் அரைக்க | |
| வீரம் | ,, 1 | மெழுகாகும் | |
| பூரம் | ,, 1 | | |

முடிவு :

**சன்னிக்கி ஒத்தடம்**

........ருக்கன் பூவு ஓமம் யிது மூன்றும்......லிடித்து ஒத்தடம் கொடுக்க சன்னி தீரும்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், சாம்பிராணி பதங்கம், கெந்தி மெழுகு, வயறு கடுப்புக்கு பஷ்பம், குமரித் தயிலம், கொம்பரக்குத் தயிலம், மேகயெண்ணெய், கோடாதூழி மாத்திரை, கோரேசினை மாத்திரை, உப்பு சுன்னம் வயத்து வலிக்கு வெள்வங்கபற்பம், வீக்கத்துக்கு கியாழம், ஆருத புண்ணுக்கு பிளாஸ்த்திரி முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1417. சுவடி எண் : 723.

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 25. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 100.

அளவு : $11\frac{1}{2} \times 2$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

**வீக்கத்துக்கு புகை போட மருந்து**

| | | | |
|---|---|---|---|
| ஒமம் | பலம் | 1 | பால் சாம்பிராணி பலம்—1 |
| லிங்கம் | ,, | 1 | எல்லா சரக்கையும் கல்வத்தி |
| ரசம் | ,, | 1 | லிட்டு அரைத்து வெள்ளை |
| தாளகம் | ,, | 1 | துணியில் தேன் மெழுகை |
| கெந்தி | ,, | 1 | ஒத்தாப்பி(ல) தடவி |

முடிவு :

தூள்பண்ணி சாத்தி போட்டு ஓட்டில் போட்டு கிண்டி
ரெண்டு குன்றியிடை கொடுக்கவும் பன வெல்லம்.

கடவுள் துணை
சூதகவா(ய்)வு பாறிச வா(ய்)வு மகோதரம்
யிதுகள் தீரும்

**காலம் :**

இல்லை.

**குறிப்பு:**

**இதில், விக்கலுக்கு, கிருணி, போக்கு, குட்ட மருந்து, ஆமையோட்டு பற்பம், கொடிவேலி தைலம், பூர பஸ்பம், பாம்பு கடிக்கி, சுரத்துக்கு தாளக பற்பம், பறங்கிப்பட்டை லேகியம், உப்பு பற்பம் முதலியன உள்ளன.**

---

வரிசை எண் : 1418. சுவடி எண் 724.

# வைத்தியத் திரட்டு

**ஏடுகள் : 38. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.**
**பக்கத்திற்கு : 5—7 வரிகள். கி. எண்ணிக்கை : 600.**
**அளவு : $24 \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.**
**ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.**

**தொடக்கம் :**

### துருசு செம்பு

துருசு பலம் 1 தூள் செய்து இரும்பு கரண்டி வெள்ளையாயி துலக்கி துருசு பொடி போட்டு பழச்சார் விட்டு நாலு கடுக்காயி தோல் ஞாலு நொனா புங்கன் பழத்தோல் தூள் செய்து போட்டு அரைவீசம்படி சலம் விட்டு கலக்கி

**முடிவு :**

### பல்லி தம்பனம்—மலாயி பாஷை

பல்லி ஞயத்துக்கிழமை நிர்வாணமாயி அடித்துதோலுரித்து சத்துருவு நீர்க்குழி மண்ணெடுத்து—தியானம்—பிக்கிபானு பிக்கி கெயன பானு பிக்கி சாத்தொ சவுதா பானு—தொஞெஞதோ தொஞெஞதொஞெ சம்பாரணி 1008 செபம் பண்ணி பல்லி தோலில் போட்டு கட்டி தலைகீழா கட்டவும்—தம்பனம்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், சாரக்கட்டு செந்தூரம், லிங்கக்கட்டு, சாரசெயநீர் வேதை குரு, வெள்ளை பாஷாணம் செந்தூரமெழுகு, துருசு நுடி சுன்னம், சூதக் கட்டு, உப்புக்கட்டு, மேகவாய்வுக்கு யெண்ணெய், தந்த வாய்வு பல் ஆட்டம் தீரும். கெவுரிவேதை, ரசவேதை, வெள்ளைப்பாஷாண வேதை முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1419. சுவடி எண்: 725.

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 82. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை.
பக்கத்திற்கு: 6 - 8 வரிகள். கி. எண்ணிக்கை : 800.
அளவு : 12 × 2½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**கணத்தெண்ணெ**

தித்தாமணக்கு முத்து படி 2½ பழம் பாசி சாறு படி அரைக் கால், ஆனெ நெருஞ்சி சாறு படி அரைக்கால், பிளியாரைச்சாறு படி அரைக்கால், வல்லாரைச்சாறு படி அரைக்கால், சாணுக்கி சாறு படி அரைக்கால், வெது படிக்கி சாறு படி அரைக்கால்.

**முடிவு:**

ஏலம் பலம் கால், சாதிக்காயி விராகனிடை ஒன்று,
வால்முளகு விராகனெடை இரண்டு, அதிவிடையம்
விராகனெடை ஒன்று, சக்கரை பலம் ஐந்து, இந்த
சரக்கு யெல்லாம் வாங்கி வந்து யிளவறுத்துக் கொண்

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், மேக கிருணிக்கி, வில்வாதி, விரோசனம், மாந்தத்துக்கு எண்ணெய், சுளுகணத்துக்கு, மாந்த கண மாத்திரை, குழந்தையளுக்கு வயறு பேதிக்கு, உள்க்காச்சல், உலந்துபோற வெட்டைக்கு, சலபீனி சத்துக்கு, எரைப்பு யிருமலுக்கு, கன்னி வயத்து வலிக்கு முதலியன உள்ளன.

---

**வரிசை எண் : 1420.** **சுவடி எண் : 726.**

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 20. ஏட்டின் நிலைமை : பழுதுபட்டநிலை.
பக்கத்திற்கு : 6—7 வரிகள். கி. எண்ணிக்கை : 200.
அளவு : 12½ × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**அரிதாரக்கட்டு**

மஞ்சள் கருவு நாலு புடம்
கொடிக்கள்ளி எரிப்புடம் போடவும்

சாரவிட்டு மலப் புளியம் பூ நீறும்
ஒன்றாய் ரேகித்து ஒன்று சேர்த்து
தாரம் போட்டு மேல் கவசம் செய்து

**முடிவு :**

மூன்றுஞ்சேர்த்து படினமா மிண்டஞ்சார்
தன்னாலாட்டி பலமொரு வங்கத்திற்
கவசித்தேதான் மடி......முதல் பிடத்தில்
தாங்கி வாங்கு மாசற்ற திருநீறு போலாமென்னே. 28

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், அரிதாரக்கட்டு, பெரும் பாட்டுக்கு மருந்து, வெள்ளிபற்பம், பஞ்சலோக செந்தூரம், நீர்ச்சொட்டு சுருக்குக்கு, துன் மாங்கிஷத்திலுல் இருக்கும் கல்லுப்புக்கட்டு, துரிசு குரு, சகல வியாதிக்கு எண்ணெய், முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1421 சுவடி எண் : 727.

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 30. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு : 14 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

ஹ
ஆம் ஊம்
ஓம்
அவ்வும் சிவாய நம
உவ்வும் சிவாய நம
(சக்கரம் ஒன்று இருக்கிறது)
வயிரவர் தியானம்

அங்—உங்—வங்—சிங்
அஷ்ட்ட பயிரவி
சாபநிவர்த்தி—நசி நசி.

**முடிவு:**

கட்டாத காலி தெரிவிட்டோடி மீளவரு
கண்டு கொள்ளாத விதமோ—கவலை
மரைவிரி கொம்பு சிவலமாக காளைவெகு
கடினம் பிடிபடாது தொட்டாலும் முட்டிடும்
கிட்டவர ஒட்டாது சுழிபேதமுனை கூர்மையாம்.

(பின்னர் ஒரு சக்கரம் உள்ளது)

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், வயிரவதியானம், குட்டம், பூதப்பிரேத மாரணம், விபூதி, கட்டிகளுக்கு மந்திரம், திஷ்ட்டிக்கி வேப்பிலைகட்டி, சுளுக்கு, அஷ்ட்ட வயிரவன் தியானம், தெரிசிக்க தியானம், சாப நிவர்த்தி, ரசமணி, ரச குளிகை முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1422 சுவடிஎண் : 728

## கர்மானுபோக சூத்திரர்—302

ஏடுகள் : 84. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 1500.
அளவு : 24 × 2½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம்:**

(தலைப்பு இல்லை)

............மாய் மும்மூலம் பொ............
......................சிரசிற் சூடாம்
காரணமாய் நீர்....................ாகங்
கனலெழுந்து வாய்வுனல்ச் சூ............

**முடிவு :**

வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணங்க ளேது
மாந்தமொடு சுளிதுரப்பு வலிக ளேது
பரிசமாங் கிறப்பனெடு பறங்கி யேது
பஷ்சிட மறவையுட தோஷ மேது
தெரிசினமாங் கணங்களிலே வருவ தேது
தீர்க்கமடா செறுவருக்கு தேவா யமுற்தம்
தரிசினமா மின்னூலில் கற்ம தற்மம்
கட்டாக மருந்துவகை கண்டு முத்தே.

ஸ்ரீராம ஜெயம்
குருவே துணை

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், 301 செய்யுட்களில் 119 முதல் 177 வரை செய்யுட்கள் இல்லை. இதில் காந்தபற்பம், தாம்பிரபற்பம், ரசபற்பம், வெள்ளீய பற்பம், அஞ்சனக்கல் பற்பம், உப்பு நீறு, தங்க நீறு, கண்வியாதி, கற்ம நிவர்த்தி, ஆனந்த வாய்வு முதலியன கூறப்பட்டுள்ளன.

இதில் இன்ன கர்மத்தால் இன்ன நோய் வந்தது என்று கூறப்பட்டு உள்ளது. அதற்குப் பரிகாரமும் கூறப்பட்டுள்ளது. மருந்துகளும் காணப்படுகின்றன.

இது எமது சுவடி எண் 8/D. 9, எண் 9/D. 10, எண் 324 (a)/D. 636 போன்றது. பாடவேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. முதல் ஏடு முறிந்துள்ளது.

---

வரிசை எண் : 1423. சுவடி எண் : 729

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 47. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5-8 வரிகள். கி. எண்ணிக்கை : 750.
அளவு : 18 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

மேகம் இருவத்து நாலுக்கும் யிந்த எண்ணை—பத்தியமில்லை

வெழ்ப்பாலை அரிசி பலம் ஒன்று, சிரு லவங்கப்பட்டை பலம் ஒன்று. வால்முளகு பலம் ஒன்று, அதிமதுரம் பலம் ஒன்று சீரகம் பலம் ஒன்று. யிந்துப்பு பலம் அரை. விளக்கெண்ணெய் சேரு ஒன்று.

**முடிவு:**

விழவேண்டுமென்முல் எலுமிச்சம் பழத்தே சப்பினுல் பிந்து விழும். வெள்ளை சாட்டரணை யிடிச்சு சார் பிழிஞ்சு, சார் சேர் ஒன்று, நல்லெண்ணெய் சேர் ஒன்று, பதமா காச்சி மூணு ளுள் முழுக யீளை யிருமல் சுவாச........

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், கழுத்திசுவு சன்னிக்கித் தயிலம், வயத்துவலிக்கு, மகோதரத்துக்கு, கொழந்தைகளுக்கு மாந்தை எண்ணை, கெணை மாந்த எண்ணை, கேரு மாந்தை கெஷாயம், நாக்குபூச்சி விழ, சகல மாந்தைக்கி எண்ணை சீரக சூரணம், கிராணி கழிச்சலுக்கு, தீராத கழிச்சலுக்கு, ஒருத்தலை நோவுக்கு முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1424. சுவடி எண் : 730(a)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 11. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 150.
அளவு : $11\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

வில்வம் பட்டை தயிலம் இரக்கிக்கொண்டு புழுகு, சவ்வாது கோரோசினை, பச்சைக் கற்பூரம், தயிலத்தில் கூட்டுரது.

**முடிவு :**

குத்து வெட்டு அம்பு தையாது. விவாடருனு காந்திரு தீப தூபங் குடுங் ஓம், ஓம். ஸ்ரீ யென்று செவ்வாக்கிழமை—காலமே பிடுங்கி தலையிலிடக்கா . . . . . .

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில் மந்திரங்களும் சக்கரங்களும் இருக்கின்றன.

---

**வரிசை எண் : 1425.** சுவடி எண் 730(b)

## அகத்தியர் சூத்திரம்--ஐம்பது

ஏடுகள் : 25. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7—9 வரிகள். கி. எண்ணிக்கை : 250.
அளவு : $11\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

நாடியதோ ரகண்டபதம் பூரணமாய் நின்ற
நாதனெடு கிணேசன்முதல் கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனுரு மென்னைப் பெற்ற
ஆத்தாளும் நாவுதனில் குடிகொண் டேதான்

**முடிவு :**

கண்டாக்கால் வாதமெல்லா மடிக்கீழ்ப் போதுங்
கருவான சவுக்காரம் மகிமை தன்னை
விண்டாக்கால் நசித்திடுவாய் நூல்கு டாதே
வேதாந்த ஞானியென்று லீயான் பாரு
தொண்டுசெய்து பதினாறு வருடங் காத்துச்
சோதித்துப் பாத்துப்பின் வாங்குவா யப்பா
சண்டமா ருதம்போலே வெளிய தாக
சாத்தியதோர் வயித்தியந்தா னன்பதுந்தான் முத்தே.

கிஷ்ட்டண சகாயம்

**காலம் :**

இல்லை.

**குறிப்பு:**

இதில், பூநீறுவித்தை, வெள்ளீயபற்பம், அரையாப்புக்குச் சூரி எண்ணெய், சித்தர் பெருமை வெள்ளைப் பாஷான பற்பம், பாஷாணக் களங்கு, முதண்ட கஷாயம், சவுக்கார வைப்பு முதலியன உள்ளன.

இது எமது சுவடி எண் 121 (h)/D. 191, எண் 311 (h)/D. 569 போன்றது. பாடவேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன.

---

வரிசை எண் : 1426. சுவடி எண் : 730(c).

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 18.(36-ன் பின்புறம்-48) ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 200. அளவு : $11\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ். ஆசிரியர்: பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

வேது

அப்பிரகம் செந்தூரம் வகை புளிச்ச தண்ணீர்
எலுமிச்சம்பளச்சாரு கரிப்பான் சாரு
நவ்வல்பட்டை சாரு பொய்த்தலைக் கரிப்பான்
கருநொச்சிச் சாரு வெள்ளைநொச்சிச் சாரு.

**முடிவு :**

அரையாப்பு பெரிய பி.........லை விஷ்டணு கரந்தி சமூலம் நத்தச் சூரிவேர் யிது ரெண்டு மிலுமிச்சங்காயளவு அரைத்து ஒரு சிரங்கை நல்லெண்ணெயில் குளப்பி மூன்று நாள் தின்னவும்-புரையான புண் தீரும். யிது கைகண்டது.

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

**இதில், தாம்புரத்துக்கு சுத்தி, லிங்கபற்பத்துக்கு விபரம், வயிற்றில் கட்டி கரைய, கிருணிக்கு தாழ மாதளைச் சூரணம், சன்னி 20-க்கும்**

மருந்து முதலியன உள்ளன. இத்துடன் சக்கரங்களும், மந்திரங்களும் உள்ளன.

---

வரிசை எண் : 1427. சுவடி எண் : 730(d)

# கிணறு வெட்ட கூறை (கூப) சாத்திரம்

ஏடுகள் : 8. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : $11\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

கிணறு வெட்ட வேணுமென்றால் வந்தவன் நின்ற குறி அறிவது

மேஷத்தில் வந்து நின்றால் பாறை காணும்
ரிஷபத்தில் வந்து நின்றால் நல்ல தண்ணீர் காணும்
மிதுனத்தில் வந்து நின்றால் வருத்த தண்ணீர் காணும்
கடகத்தில் வந்து நின்றால் தண்ணீர் வறத்து காணும்

**முடிவு :**

கணங்காலைத் தொட்டால் கயத்தில் வெகுசலம் தோன்றும் கல்மணற் கலத்தில் காணும். இதுவெல்லாம் தட்ச(ண)மூர்த்தி யென்றறியவது.

குருவே துணை
ஸ்ரீராம செயம்
வாலைத்தாய் துணைச் செய்யவும்
கூகை சாஸ்த்திரம் முற்றும்.

நீர்க்கட்டும் நிலமைதனை
பன்னிரு கூறிட்டு
நிகள் கடைராசி பிரமன்
மேலவையது வாற.

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில் கூகை என்பது கிணற்றினைக்குறிக்கும் கூபம் என்பதாகும். இதில்,ராசி லக்கினம், நாள், உடலுறுப்பு ஆகியவைகளைக் கொண்டு கிணற்றில் தண்ணீர் வரும் நிலை கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண் : 1428. சுவடி எண் : 731

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 106(46-வது ஏடு இல்லை). ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். கி.எண்ணிக்கை: 4000. அளவு : 15×3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

வெள்வேலம் பட்டை..........
போட்டு முப்பத்திரண்டு படி தண்ணீர்..........
படி தண்ணீரும் பட்டையும் ஒரு படி..........
யிறக்கி டிை தயிலத்தை வடி செ....

**முடிவு :**

மெளுகு பதத்தில் லேகியஞ் செய்து வைத்துக்
கொண்டு யிது தீரும் வியாதி சயம்
இருமல் இளைப்பு தொரித்தல வாய்வு
யிது வெல்லாந் தீரும். பத்தியம் புளி
தயிர் கறுவ..........

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், துவாலை எடுக்க, தேங்காய் லேகியம், மூல முளைக்கு குளிர் சரத்துக்கு, யிருமலுக்கு, மேகத்துக்கு, வகுத்து அலைச்சலுக்கு செவதைச் சூரணம், வாய்வுக்கு லேகியம், அரையாப்புக்கு பத்து, ரசக்கட்டு, காந்த ரசச்குழம்பு, தலையிடிக்கு, பூரணாதி லேகியம் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1429. சுவடி எண் : 732

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 70. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 9-11 வரிகள். கி. எண்ணிக்கை : 1300.
அளவு : $9\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**




**முடிவு :**

ஆமய்யா ஆமய்யா றீமரும்
கிலியும் ஸ்கிரீம் சவ்வும்
இரிம் கிரீம் ஓம்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

**இதில், சக்கதேவி மந்திரம் சக்கரத்துடன், கெற்பம் துவாரம், வால் மிக கெட்ட பேர்கள், ஆண் பெண் அறிய, சருவசன வாய்க்கட்டு**

முன்னிருக்கிற சக்கரம், சூடன் வைப்பு, அர்வந்தடுக்க அரவமாட, லிங்க செந்துரம், கெந்தகபற்பம், விக்கல், கண்மாலைக்கு முதலியன உள்ளன.

இதில், மந்திரங்களும் சக்கரங்களும் மிகுதியாக உள்ளன.

வரிசை எண் : 1430. சுவடி எண் : 733

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 58. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5-7 வரிகள். கி. எண்ணிக்கை : 1000.
அளவு : $22 \times 2$ & $25\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ .மீ. எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

### செயநீர்கட்டு

பூனீர் வுப்பு பலம் ஐந்து. பொட்ச உப்பு பலம் ஐந்து. பழம் சார் விட்டு நால் சாமம் அரைத்து கூழ்பாக்கி கடாயில் போட்டு லேசா யெரிக்கவும். கட்டும். யிதை தூள் செய்து பனியில் வைத்து சக்குநீர் எடுத்துக்கொண்டு ரெண்டாவது.

**முடிவு :**

### அயசெந்தூரம்

அயம் பலம் ஒன்று. பூநாகம் சுத்தி செய்து ரெண்டு சரக்கையும் அரைத்து புடம் போடவும் ரெண்டாவது பில்லை திருப்பி ஓட்டில் வைத்து புடம் போடவும். யிந்த பிரகாரம் பூ நாகம் போட்டு அரைச்சி அரைச்சி பில்லை திருப்பி வச்சி மூணு புடம் போடவும். செந்தூரம் ஆகும்,

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், நவச்சாரக்கட்டு செந்தூரம், அரைபொடி செந்தூரம், வெங்காரம் சுண்ணம், துருசுச்சுண்ணம், குருவுச் சுண்ணம், உப்பு செந்நூரம், வெள்ளிமுறை, நாகக்கட்டு, பாசாணக்கட்டு, அயதாம்பூரம், தாம்புரம் வெள்ளை அத்தி முதலியன. உள்ளன.

வரிசை எண் : 1431. சுவடி எண் : 734

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது.
பக்கத்திற்கு : 4-6 வரிகள். கி. எண்ணிக்கை : 80.
அளவு : 27 x 2 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

தாம்புர கௌங்கு

தாம்பு ரெு றாது 3. காப்புசிசோறு தெ
யெ—னெ வெட்டை மாடிவு சோறு தெ
கெந்த தொறா தெ.

**முடிவு :**

இடை போடவும் யெறண்டும்....கலந்து
உருகின பின்பு அதை யெடுத்துக்கொள் ளஉம்.
மாத்து யேழு காணும்
மூணுக்கு ஒன்று தங்கத்தை சேர்த்துக்
கொள்ளவும்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில் நாளகம், துருசு, லிங்கம், உப்பு செந்தூரம், தாம்புரசுத்தி முதலியன உள்ளன. ரசவாதம் பேசப்படுகிறது.

---

வரிசை எண் : 1432. சுவடி எண் : 735

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 32.(உதிரி ஏடுகள்) ஏட்டின் நிலைமை : பழுது பட்டது. பக்கத்திற்கு: 4-9 வரிகள். கி.எண்ணிக்கை: 500.

அளவு : 21 × 2½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

காட்டான அஞ்சனத்தை சொல்லக் கேளு
கருங்குருவி பச்சைஒந்தி தேத்தான் வேரும்
பூட்டான செவ்வலரி கீழா நெல்லி
புகழான காக்கைகண பூனைக் கண்ணு

**முடிவு:**

சுருக்கு குடுத்து மறுபடியும் அந்த பாஷாணத்தை
மறுபடியும் சதுரக்கள்ளி முறுக்குகள்ளிக்குள் வைத்து
புடம்போடச் சுன்னமாயி போயிவிடுகுறது அதை
யெடுத்து ஏழுக்கு ஒன்று தாம்பாத்தில் உறுக்குமுகத்தில்

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், அஞ்சனம், வெள்ளக் குருவரம், உப்புச்செந்தூரம், அகத்தியர் குளம்பு, பிள்ளைகள் அயக்குடித்த யிருமலுக்கு, வாய்ப் புண்ணுக்கு நெய்முறை, பிணி கொண்டோர்க்குப் பத்தியக்கறி சொல்லுங்கவி, சகல சுரங்களுந்தீர கியாழம், ரசகற்பூரம் வைக்கும் முறை, தாம்புர செந்தூரம் முதலியன உள்ளன.

ஏடுகள் வெவ்வேறு அளவில், வெவ்வேறு எழுத்துக்களில் உள்ளன.

---

வரிசை எண் : 1433. சுவடி எண் : 736

# வைத்தியத் திரட்டு

ஏடுகள்: 50. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 4-6 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு: 14 × 2½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**மாந்த தோஷத்துக்கு மாத்திரை**

ஆடுதின்னாப் பாளைவேர் அவரி வெர்ப்பட்டை
புத்திரசிவி விரை அக்கரா காரம்
அதிமதுரம் யிந்த அஞ்சு வகையுமாகச்
சமன் கூட்டி கலுவத்தில் போட்டு
வென்னீர் விட்டு அரைத்து

**முடிவு:**

அரைத்து குண்டுமணிபோலே மாத்திரை திரட்டி
நிழல்லே உலத்தி காய்ந்தபோது யிதுக்கு
அழிஞ்சில் வேர்ப்பட்டை கொண்டுவந்து யிடித்துச் சூ
.................................
அக்கினி மாந்தம் தீரும். வாத(ம்) ஒன்பதும் அருமாம்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், வாத சுரத்திற்கு, கடிவிஷங்களுக்கு, எலிகடிக்கு, மாந்த தோஷ சுரத்துக்கு, பிள்ளை உண்டாக, தலை சுத்திப்போட, பசியாதிருக்க, மோகினியகல, தெய்வமோதிரம், கண்புகை படலம் தீர, கனவில் விந்து நஷ்டமற, கனவு காணாதிருக்க, உடம் பெரிய, தானாய்பேயோட முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1434. சுவடி எண் : 737.

# கெர்ப்பம் தரிக்கத் தைலம் முதலியன

ஏடுகள் : 13. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 5—6 வரிகள். கி. எண்ணிக்கை : 150.
அளவு : 24 × 2½ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

. . . . . .ளவே மண்டலத்தில்த் தீரும் தீரும்
குணமாக யின்னமொரு . . . . . . . . . . . .ல்வேன்
பிள்ளையில்லாப் பேர்களுக்கு மருந்து சோல்வேன்
புகழாக பேய்க்கும்மட்டி வித்து நேர்வாளம்
உள்ளபடி சரிசமனுய் குழித்தயிலம் வாங்கி

**முடிவு:**

வாதென்னற போக்கெல்லாம் மயங்கிப் போக
வயித்தியத்தின் திறவுகோல் மாரம் பிலாண்
சூதென்ற செந்தூர வைப்புக் கெல்லாம்
துடிரு . . . . . . . . . . . . . . .சொல்லிப் போட்டேன்
காதென்ற உபதேசம் . . . . . . . . சொல்ல
கையாண்ட குருவாசற்க் கருப் பாரே. 17

பாரப்பா குருவதுவே கழஞ்சு . . . . . .
(பா)ச்சியே லோகத்தைத் தீத்திப்

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், முதல் ஏடு ஒடிந்துள்ளதால் தலைப்பு இல்லை. இதில் மண்டூர செந்தூரம், முப்புக்குறு, முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1435 சுவடி எண் : 738.

# சட்டைமுனியார் பட்சணி

ஏடுகள் : 25. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 350.
அளவு : 17 × 3. சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : சட்டைமுனியார். முழுமை : முற்றுமுனது.

**தொடக்கம் :**

*பதுமலாப் ......னமுத முத்த வாலே*
*பரைச்சியெனும் வகையிடைக் கச்சி*
*அப்பென் ருத்தாள் சதுமுகனு ரிருதயத்தில்*
*விஞ்சைப்போல் சகலருக்கும் மனோமணியாய்த் தானே*

**முடிவு :**

*நாணிவனுய் நின்றஉப னிடத மாற்கம்*
*நற்கமல மாயிரத் தெட்டிதனைப் பத்திக்*
*கொன்றுளால் நின்றவனே நீய்னுன் னென்று*
*குருவிருக்குஞ் சந்நதியை குவிந்து போத்தே. 81*

*கைலாச சட்டைமுனியார் பட்சணி முத்தும்*
*குளந்தையானந்தா பாதமே கெதி.*

**காலம்:**

*இல்லை*

**குறிப்பு :**

இதில் திருமந்திரம் (18), தெட்சணமூர்த்தி ஆயிரத் திருநூறுக்குச் சுருக்கம் முதலியன உள்ளன. இது பரிபாஷையாகக் கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: *1436.* சுவடி எண்: *739.*

# அகத்தியர் சூத்திரம்--ஒன்பது

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது.
பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 70.
அளவு : 27 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

சத்தியமே ஒன்றே தெய்வம்
சகலருக்கு சிவனுயிர மதுதா னுச்சு
புத்தியினு லறிந்தோர்கள் புண்ணி யோர்கள்
பூதலத்தில் கோடியிலே ஒருவ னுண்டு

முடிவு:

சத்தியமே வேணும........மனுஷ..........
.........கண்டா னுகாது தவிற லாகாது
நித்தம்நெறி தவருதே நேமம் மறவாதே
நிஷ்ட்டையிலும் சமாதிவிட்டு நிலைபெருதே
புத்திகெட்டு திரியாதே பொய் சொல்லாதே
புண்ணியத்தை மறவாதே பூசமா வாதே
கத்தத்தைத் தள்ளிவிட்டு தர்க்கமி டாதே
காமியென்றும் நடவாதே கதிர்வேண்டு காலை 9

முற்றிற்று
அகார வகார மகார சிகார
சிவாயநம
முற்றும்

காலம் :

இல்லை

குறிப்பு:

இதில், இடையிடையே இடம்விட்டு எழுதப்பட்டிருக்கிறது சிதைந்த சுவடியின் படியாகுமிது.

---

வரிசை எண் : 1437 சுவடிஎண் : 740(a)

# குழந்தைகளுக்கு வேப்பெண்ணெய்த் தயிலம்

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: நல்ல நிலையில் உள்ளது.
பக்கத்திற்கு : 4-8 வரிகள். கி. எண்ணிக்கை : 10.
அளவு : 36 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்:

திப்பிலி தேசாவரம் வெள்ளப்பூடு
வசம்பு ஓமம் பூநாகம் நாயிதை வேளை
வேர்நல்ல தைவேளைவேர் ஆக்கி பலம்கால்
வேப்பெண்ணை படி ஒன்று

**முடிவு:**

ஓதுகுரு வாரஞள் யேழ தாகும்
ஓவியதோர் வெள்ளியதுக் காறு ளாம்
பேருசனி யானதுவும் மாதம் தேதி
பிறந்தசுரந் தனைவிடுதல் பேசுவோமே

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், முதல் ஏட்டில் தயிலம்மட்டும் பேசுவதோடு, கிரந்தத்தில் பூமிப் பிரார்த்தனையும் உள்ளன.

இரண்டாம் ஏட்டில் வார நாட்களில் வருஞ்சுரமும் அதன் குணமும் ஒரேபாடலில் சொல்லப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : *1438* சுவடி எண்: *740(b)*

# வியாதியாளனுக்கு உடல் சக்கரம்

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 7—8 வரிகள். கி. எண்ணிக்கை : 100.
அளவு : 36 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

அடியொன்று தலைமூன்று அதுவுஞ் சாவாம்
அடுத்தவரை ஒருநான்கு மதுவுஞ் சாவாம்
படிமுகமு முடலின்வரை யெட்டி னோடு
பலகாலும் நீடிக்கும் பயமே யில்லை.

**முடிவு :**

இந்த பிரகாரம் அசுபதி முதல் இருபத்தேழு நட்சத்திரத்தில் யெந்த நட்சத்திரத்தில் முதல் மாத முதல் நாலாம் பாதம் வரை சுரம் வந்தால் பலன் சொல்லவும்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், முதல் ஏட்டில் சக்கரம் முடிகிறது இரண்டாம் ஏட்டில் சுரம் வந்தால் நட்சத்திரப்பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

---

வரிசை எண் : 1439. சுவடி எண் : 740(c)

## ஆச்சரியம்--சருவ வியாதி வகையறிய

ஏடுகள்: 2 (4 & 5). ஏட்டின் நிலைமை : நல்லநிலை.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 60.
அளவு : 36 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

கரும வகையால் சரம் அறுபத்து நாலேழுங்
கனபிரிவு னூத்திருபது
கருதுகுளிர் சுரமூன்று கன்னிமதி மூன்றுமாங்
கனரத்த பித்தம் பதினேழ் காசமது அன்பது

**முடிவு :**

தானுறுங் கற்மநோய்கள் தவிற வேணும்
சாந்திகள்க் கிறிகை அவுடதந்தான் வகையால்
தீருமே கருவமும் பிரமம் மயமாய்
நிறைந்திடும் எங்கள் தம்பிரான் சொன்ன விதியே.
குருபாதமே கெதி

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், பூருவ கருமத்தினல் நோய்கள் வருகையும் வகையும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1440. சுவடி எண் : 740(d)

# வைத்திய சிந்தாமணி

ஏடுகள் : 264. ஏட்டின் நிலைமை : நல்லநிலை.
பக்கத்திற்கு : 7-8 வரிகள். கி. எண்ணிக்கை : 8000.
அளவு : 36 × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

உம்பர் தொழவுயர்
செம்பொன் னுலகுயவர்
தும்பி முகனடி
நம்பு வார்களே.

இகல்வினை பிணிபோ
யகமகிழ் வுறவே
திகழ்மத கயமா
முகவனை நினைவாம்.

**முடிவு :**

மேல்படி மையை வேப்பெண்ணெயில் குழைத்துக் கண்ணில் கலிக்கம் போட கண்ணில் நீர்வந்தால் பிராணன் யிருக்கெங்குற நிச்சயம் அறிந்து கொள்ளவும்.

பத்தியம் உப்பு சேர்த்துக் கொள்ளவும். புளி தள்ளவும் வேப்பெண்ணை தேச்சி சிநாநம் பண்ணவும்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், முதல் ஏட்டில் தலைப்பு இல்லை. இரண்டாம் ஏட்டில் பண்டித லட்சணம் வயித்திய சிந்தாமணி' என்றுள்ளதால் இதற்கு, 'வைத்திய சிந்தாமணி' எனப் பெயர் கொடுக்கப்பட்டது

**இதில், சரீரக்கிரிகை, வச்சிரகாயம், ரோகம் வரும்வாறு, ரோகந் தீருநாள், தாதுநிதானம், நாடிசாத்திரம், அசாத்திய குணம், பித்தசுர**

குணம், சேத்துமசுரகுணம், வாத பயித்திய தொந்த குணம், கெர்ப்பிணி மேல் சுவாசமெடுத்தால் மருந்து, தோஷகுணம் பதின்மூன்றுக்கும் பெயர், சன்னிக்குக் கண்டுசம் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : *1441.* சுவடி எண் : *740(e)*

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 60.
அளவு : 36 X 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**பேதி குளிகை**

ரசம், லிங்கம், இந்துப்பு, வெங்காரம் கடுக்காய், கடுகு ரோகிணி வெள்ளைக்காக்கணன் வேர் வகைக்கு !விராகனெடை 3. சுத்திசெய்த வாளம் விராகனெடை 8. பிரண்டைச்சாற்றால் அரைத்து

**முடிவு :**

உருகி களங்காய் வருகிற வரையில் பூவரசம் குச்சிக் கொண்டு கிண்டி மேல்படி களங்காய் உருகிச் சேரும்போது யெடுத்து வைத்துக்கொண்டு பூரத்தில் பத்துக்கொன்று குடுத்து எடுக்க புதிகமாட்டாது ஊற்மாயிது அ.........வீரம் பூரம் மூணு தங்கம் ஒன்று உருக்கவும்

குருபாதமே கெதி
மாணிக்கவாசகம் பிள்ளை முறை

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், பேதி குளிகை, ராமபாண குளிகை, ரத்தம் விழுந்தால், தாம்பூரசுத்தி, கருவங்கம் களங்கு முதலியன உள்ளன.

வரிசை எண் : 1442. சுவடி எண் : 740(f)

# அகத்தியர் வாகடம்

ஏடுகள் : 7. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு: 7-8 வரிகள். கி.எண்ணிக்கை : 300.
அளவு : 36×3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பாரப்பா செம்பினுட வெள்ளை கேளு
பரிவான தாம்பிரத்தைக் குகையில் வைத்து
சேரப்பா பதினாலு பலமே போடு
சேர்ந்துருகும் போதிலே மருந்து கேளு

**முடிவு :**

வாமப்பா யிந்தவகை மருந்தை வைத்தால்
வயித்தியன் பேருரைக்கில் நோவுக ளோடுந்தான்
தாமப்பா யெட்டுரெண்டுங் கூட்டிக் கொண்டு
தடையறவே உருவேறச் சித்தி யாமே. 36

குருபாதமே கெதி
தேவி சகாயம்

**காலம் :**

சோபகிறுது வருடம் தை மாதம் 7-ம் தேதி குருவாரனாள் ராமசுவாமியார் எழுதினது.

**குறிப்பு :**

இதில், வாய்வு பித்தத்துக்கு மருந்து, நாகசுத்தி, லோகவெள்ளை முதலியன கூறப்பட்டுள்ளன. மைபூசாத ஏடுகள்.

---

வரிசை எண் : 1443. சுவடி எண் 740(g)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 5—8 வரிகள். கி. எண்ணிக்கை : 200.

அளவு : 36 × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

**பாஷாணக்கட்டு**

பாஷாணம் கட்டியாக வாங்கி தாம்பிரக் கிண்ணத்தில் போட்டு திருகைக் கள்ளிப்பால் ஒருபடி விட்டு எட்டுநாள் ஊற வைத்து அந்த மெழுகோடேயெடுத்து சுட்ட செங்கல் குடைந்து அதிற்குள்ளே வைத்து

**முடிவு :**

**பாசாணக்கட்டு**

தென்னமட்டை சாம்பல்படி 2. சட்டியில் வைத்து மெத்தித்து பாசாணக்கட்டியை அதின்மேல் வைத்து அரசம் பழுப்பு மூடி மேலுங் சாம்பல் கொட்டி ரெண்டு சாமம் ஆவரம் விறகு கொண்டு யெரியவிடவும் ஆரவிட்டு எடுக்கவும் கட்டிப் போம். ஊசி புகை புகையும்

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், பாசணக்கட்டு, துருசுச் சுன்னம், ஷி சுன்னம், ரசபதங்கம், ரசசெந்தூரம், கெந்தகக்கட்டு, தாளகபற்பம் முதலியன உள்ளன.

---

**வரிசை எண் : 1444.** சுவடி எண் : 741(a)

# ஆயுர்வேத சாத்திரம்

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 250.
அளவு : 36½ × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**சுரகேசரி**

மஞ்சனுவி வெங்கார மதிக்குங் கெந்தகம்
வாய்விளங்கம் வஞ்சமில்லாத் திரிகடுகு வகையோ
ரொன்றுக் கிரண்டரையாம் நஞ்சுபோக்கி நேர்வளம்
நல்லபருப்பு மொன்றே கால்

**முடிவு:**

சுக்கு விராகனெடை 1, கொத்தமல்லி விராகனெடை 1, இவ்விரண்டும் இருநாழி நீரிலிட் டெட்டொன்ருய்க் காச்சி அதில் ஒரு குளிகையிடவும்.

இப்படி மூன்று நாளிட நாலு நாளைச் சுரம் தீரும்

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், சுரகேசரி, சருவசுரகேசரி, சுராங்குசம், மிருத்திராதிக குளிகை, சருவசுர குளிகை, சருவகுலாந்தகன், அத்தனுதீசுவரன், பிள்ளையென்பார் மன்னன், சருவசங்காரன், மதனுங்குசம், புரந்தராதிக் குளிகை, உதைய மார்த்தாண்டன், நாளையென்பார் நாயன், ராமபாணக் குளிகை ராமபாணம், சுரகோளரி, சுரத்துக்கு அத்தநாரீசுர நசியம், ரணங்க வயிரவன் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1445 சுவடி எண் : 741(b)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 154 (3-156). ஏட்டின் நிலைமை : நல்லநிலை.
பக்கத்திற்கு : 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 6000.
அளவு : 36½ × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.
(தொடக்கம் 2 ஏடுகள் இல்லை)

தொடக்கம் :

செவிரோகம், காதிற் சீக்கு

எருக்கினொடு கள்ளியிலை முருங்கை நொச்சி
திருத்துளாய்ப் பங்சை சிறுபாகல்-பெருத்த
கருவாழை யிஞ்சி கரிமுகவை யென்னை
திருவாளை போங்காதிற் சீ

முடிவு :

பச்சைக் கற்பூரம் எலுமிச்சம்பழந் தின்றால்
வள்ளியிலை மாற்று யெண்ணைக்கும்
தேனுக்கும் நபக்கும் கரிமாத்து
பேய்த் திமிட்டிக் கிலவம் பிசின் மாத்து

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், தலைப்பு ஏடுகள் இரண்டு இல்லாததால் தலைப்பு அறியக்கூட வில்லை 3-வது ஏட்டிலிருந்து தொடங்குகின்றது.

இதில், செவிநோய்க்கெல்லாம் எண்ணெய், நாத்திர சீய்க்கும் நோய்க்கும் எண்ணெய், காதிரைச்சல் எழுச்சி, நீர்பாய்ச்சல் புண்ணுக்கு எண்ணெய், நயன ரோகம் வரும் வாறு, கண் வலிக்கு, மாலைக் கண்ணுக்கு, நயன வியாதி தொண்ணூற்றுறுக்கும் உண்டை, பெரும்பாடுமுதற் சகலத்துக்கும் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1446. சுவடி எண் : 741(c)

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 3.(ஏட்டெண் இல்லை) ஏட்டின் நிலைமை : நல்லநிலை. பக்கத்திற்கு: 9-10 வரிகள். கி.எண்ணிக்கை: 160. அளவு : $36\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

**தாம்பிர பற்பம்**

தாம்பிரம்-6, ரசம்-12, ரசம்--12, கெந்தகம்-6,
அரிதாரம்-6, அரபொடி-6, மேனிச்சார்
வாத்தரைத்து உருண்டை வட்டமாகப்
பிடித்து ஒரு கலசத்துள் வைத்து

**முடிவு:**

பனிரண்டு சாமம் மெரியிடச் சேங்கொட்டையும் வெந்து சாம்பலாய் மருந்துஞ் செந்தூரமாய்க் கருத்தாப் போலே தனித் தனி யொரு வர்ன்னமாய் இருக்கும். இதிற் காசத்தனை தேனிற் குடுக்க பித்த பாண்டு காமாலை வீக்கம் இரத்தப் பசையற்றது வயற்று வியாதி

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், தாம்பிரபற்பம், செங்கல் தாம்பிர பற்பம், ஷை 4 வகை, லோக செந்தூரம், லோக பற்பம், முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1447. சுவடி எண்: 741(d)

# குணபாடம்

ஏடுகள்: 12 (122-133) ஏட்டின் நிலைமை: நல்லநிலை.
பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை: 250.
அளவு: $36\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

**சீந்திக்கொடி**

(த)ங்க மிரும்புக் காம் வங்கத்தைத் தாரமே
கொல்லுந் தனிச்சிலையால் நாகமறுஞ் சேருமே
கெந்திக்குச் செம்பு....... இதுவுமறியவும்

முடிவு :

**கம்மந்திராய்**

ஈசுரமூலி யுஷ்ட்டணமாந் துவாக்கைப்
பகல்விஷங் குட்டந் திரிதோஷ
நாசமாம் வகையே செய்திடு மயூர
சிகைகைப்பா மங்கபந்தனை நலியும்
பேசதிசாமுட லேறிலிரத்த பித்தமொடுஞ்
சுரந்தீர்க்கு மாசில் வெண்முறுவந்
தேசிக வதனமட்டு மாளித்தட விளிமயிலே 102

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், சிந்திக் கொடி, தூதுவளை, கோணக்கிழங்கு, பெருங்கோணக் கிழங்கு, பற்படாகம், வெட்டிவேர், இலாமிச்சம்வேர், பேய்ப்புடல், காக்கணம், துளசி முதலியவைகளின் குணமும், தீர்க்கும் நோயும் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1448. சுவடி எண் : 741(e)

## மூலிகை வாகடம்

ஏடுகள் : 21. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 9-10 வரிகள். கி. எண்ணிக்கை : 800.
அளவு : $36\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : சிவபெருமான். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

**சிலத்தின் குணம்**

பூற்த்தவரு மாமுனிவன் பொய்யா தெனவுரை
சேற்த்த வளங்குணங்கள் செப்பவே-நாற்றிசையும்
கந்தன் கணபதியும் கமலாசன் றன்றேவி
சிந்தையயன் காப்பெனவே செப்பு

**முடிவு:**

**சுத்தின் குணம்**

ஈளை யிருமல்போம் பயின்றதாச் சுவாதம்போம்
அரதிசையும் அரோசிகங் கண்நோய்-அலர்ந்து
வியத்திடுமே காராருங் குமலமடமாதே கடிய
சுத்தின் குணமிது வே 237

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், பாரை நீரின் குணம். சுனை நீரின் குணம், அடவி நீர், உப்பு நீர், வென்னீர், பேரீச்சங்கனி, பல கனியின் குணம், வல்லாரை புளியாரை, சுண்டை, திசமூலம், சிவனார் வேம்பு, மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள், ஓமம், அதிமதுரம், சந்தனம், ஏலம், இலவங்கம், அரத்தை புனுகு சட்டம், குங்குமம், நார்த்தங்காய், நெல்லிக்காய், முருங்கைக்காய் முதலானவற்றின் குணங்கள் கூறப்பட்டுள்ளன.

இதில் 237 செய்யுட்கள் உள்ளன.

---

**வரிசை எண் : 1449** சுவடிஎண் : 741(f)

# குணவாகடம்

ஏடுகள் : 14. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு : 36½ × 3 சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

**சாமையரிசியின் குணம்**

உடல்குளிரும் மேகம்போம் மோங்குசுர தாகம்போம்
மடல்தங்கும் வேல்விழியில் வாதம்போம் – நடையுடையாய்
அன்னமே சாமே யருந்திநால் மேனிகேடு
சொன்னோ மிதையறிந்து சொல். 456

முடிவு:

கற்கண்டு குணம்

கற்கண்டு வாந்திகப் உஷ்ணம் போக்கும்
நெற்பொறிக்கு ளேவாய்வு நிலைகோபம் — முற்பகலும்
வாந்திபோம் மந்தமரு மானே கடனுரைக்கி
செந்தணல் நோய்போக்குஞ் செப்பு. 623

காலம்:

இல்லை

குறிப்பு:

இதில், செய்யுட்கள் 456 முதல் 623வரை உள்ளன. இதில், கொண்டைச் சம்பா, மல்லிகைச்சம்பா, யிலுப்பைச் சம்பா, நல்லமணிச் சம்பா, வழதடிச்சம்பா, கோரைச்சம்பா, அன்னமழகியான், குமுளு சம்பா, முளகு சம்பா, சீரகச்சம்பா, காளான்சம்பா, மைச்சம்பா, கொடைச்சம்பா, காடைச்சம்பா, குந்துமணிச் சம்பா, காரமணி, உளுந்து, கடலை முதலானவற்றின் குணங்கள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1450. சுவடி எண் : 741(g)

# அஷ்ட்ட கர்மம்

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 5–6 வரிகள். கி. எண்ணிக்கை : 75.
அளவு : 36½ × 3 செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம் :

காணவே வசியமொடு மாரணமு மெட்டு
கலந்துநின்ற மூலிகையை தீர்க்கச் சொல்வோம்
பூணவே ஒவ்வொன்று கட்டாய் மூலி
பேரையெல்லாம் வெவ்வேறே பிரித்துக் கேளு

முடிவு :

அன்னபூரணி ஆதிசிவனுக்கு அருள்புரிந்தாப் போல
அடியேனுக்கு அருள்புரிந்து பொருள் பெருகவே சுவாகா !

**சத்துரு வசியம்**

சிவசிவ யிதை விபூதியை உள்ளங்கையில் வைத்துக்கொண்டு உ சுழித்து கொண்டு வடகிழக்குப் பார்த்து ஜபம் பண்ணவும்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், வசியம், மாரணம், வசீகரம், முதலியனவும், மந்திரங்களும் சக்கரங்களும் உள்ளன. கிரந்தம் கலந்து எழுதப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 1451. சுவடி எண் : 741(h)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 6-7 வரிகள். கி. எண்ணிக்கை : 600.
அளவு : $36\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

**கண் ரோகம் தொண்ணூத்தாருக்கும் மை**

சீனக்காரம் விராகனெடை 12, துத்தம் விராகனெடை 6 இதுகளை சுத்திசெய்து கறிசாரங்கண்ணிச் சாறு படி-கால், சிறுகீரைச் சாறு படி-கால், பொன்னுங்காணிச் சாறு படி-கால். ஒவ்வொரு சாறையும் தனித்தனியே இஞ்சவிட்டரைத்து

**முடிவு :**

மறுபடி கடைந்து புதுக்கலசத்தில்
வைத்துக் கொண்டு வெருகடி சூரணம்
பாதி பாலில் காமகேசரி குளிகை-2
உரைத்து கலந்து அந்திசந்தி சாப்பிடவும்.

**காலம் :**

இல்லை

குறிப்பு:

இதில், சண்டமாருத செந்தூரம், கோடாசூரிக் குளிகை, அனுபானம் கண்ணுக்கு மை, இஞ்சி லேகியம், புலிவாய்கட்ட, பூபதி செந்தூரம், தங்கபற்பம், வெள்ளிபற்பம், நாகசெந்தூரம், வெண்குட்டம் தீர, சுரத்துக்கு மேகநாத குளிகை, அசனவில்வாதி, வாதம் ஐந்துக்கும் விஷமுஷ்டித் தயிலம், சிகே பொயணம், சகல வாதத்துக்கும் எண்ணெய், காமகேசரிக் குளிகை, அனுப்பானச் சூரணம், முதலியன உள்ளன.

இதில் 18-க்கும் பிறகு 19 முதல் 40 வரை வெற்றேடுகள், மை பூசப் படாமல் எழுதப்பட்டுள்ளன. இதன் பின்னர் வைத்தியம் எழுதிய இரண்டு ஏடுகள் உள்ளன.

---

வரிசை எண் : 1452. சுவடி எண் : 742(a).

## அகத்தியர் வாகட சூத்திரம்--ஆயிரத்து ஐந்நூறு

ஏடுகள் : 235. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 10000.
அளவு : $33\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

பாகுடன் கிணேசன் பாதம்
பணிந்துமுக் குணங்க ளாக
வாகடச் சுவடி யெல்லாம்
வகைவகை தொகத்துப் பார்த்து
யாகம விதிய னூலால்
வந்திடு நோய்கட் கெல்லாம்
போகநன் மருந்து சொல்வோம்
புலத்தியா பொருந்தக் கேளே ! 1

**முடிவு :**

சேறப்பா யிந்தநூல் துகையே தென்றால்
சொல்லுகிறென் ;ஆயிரத்தஞ் ஞூறுந் சொல்லும் வேதம்

நாமப்பா உள்ளபடி சொல்லி வைத்தேன்
நாதாக்கள் கடாச்சத்தாற் சூத்திரந்தான் முற்றே. 1496

மீனாட்சி சுந்தரசேபராள் துணை.

செய்ய வேண்டியது.

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், முதலில் அட்டவணை எழுதிய ஏடுகள் இரண்டு உள்ளன. இதில், வாதகுணம், பித்தகுணம், சிலேஷ்ம குணம், மேகம் வரும் வரலாறு, சுக சன்னித்தோற்றம், மூலரோகப் பிறப்பு, கிராணி வகை, மேக வகை, கெற்ப மேகம், சூலை விகற்பம், பெண்களுக்கு கெர்ப்ப சூலை, கண்ணோய் குணம், கெந்தி சுத்தி முதலியன உள்ளன.

இது, எமது சுவடி எண் 3 (a)/D. 3, எண் 323 (h)/D, 629 போன்ற தெனினும் அவற்றில் முறையே 528, 100-ம் ஆகப் பாடல்கள் உள்ளன. இதில் 1496 செய்யுட்கள் உள்ளன.

——❀——

வரிசை எண் : 1453 சுவடி எண்: 742(b)

# வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 7. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 6—9 வரிகள். கி. எண்ணிக்கை : 300.
அளவு : $33\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்:**

**சகல ரோகத்துக்கும் தேங்காய் நெய்**

முத்த தேங்காய் நாற்பது திருவி
வெந்நீர் விட்டுப் பிசைந்து பிழிந்து
எடுத்துக் கொள்ளவும். அதில்
தாளகம், கெந்தகம், கருஞ்சீரகம்
வகைக்கு களஞ்சு நாலு.

**முடிவு :**

ஆகாசக் கவனமும் கண்ணுக்கு முன்னாகத் தோனும்
வாசித் தயிலத்தைச் சித்தர் நன்றாய் மறைத்தல்லவோ
மற்ற சாஸ்த்திரங்கள் பாடிப் பார்த்த பேருக்குப்
பரியாமல்ப் போச்சு யிதை பாரிலொருவருக்கும்
பகர முடியாதே.

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், தேங்காய் நெய், தாது புஷ்டிக்கு பிரையோகம், உப்பை ரசமுறிந்த பேர்க்கு மாற்று, மலக்கட்டு வாங்க, பவுத்திரத்துக்கு ஒருத்தலைவலிக்குப் புகை, சன்னிக்கி எண்ணெய், கெர்ப்ப வியாதிக் குணமும் மருந்தும், ரெத்தரோகம் வருங்குணம், மருந்து, இருமலுக்கு மருந்து, இஞ்சிக்குளம்பு முதலியன உள்ளன.

——❋——

வரிசை எண் : *1454.* சுவடி எண் : *743(a)*

# அகத்தியர் இந்திர சாலம்--ஆயிரத்திநூறு முதற்காண்டம்

ஏடுகள் : 29. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 8-9 வரிகள். கி. எண்ணிக்கை : 1200.
அளவு: $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

**காப்பு**

சீரொரு சால வித்தை
சிவன்குரு வருளில் செய்த
வேறொரு கருவைச் சும்மா
உதகமீ துரைக்க லுற்ற

**நூல்**

பூரண வாலை ரூபம்
புரந்தமுத் தீட்சை யெல்லாங்
காரண குருவே சொல்லுங்
கடசியில் குருவே ஆடும்

**முடிவு:**

நிற்க முதக்காண்டம் தெளிந்த பல்மொழியாய்
முற்கமெனச் சொன்ன முறையெல்லாம்—பாற்கவே
சித்தருக்கு மீசனுரை செப்பியதா லேயிருநூற்
முத்திக்கு மூதுரை நூல் முத்தும் 200
முதக்காண்டம் முத்தும்.

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், ஈன மஹறைக்கரு, சாலரூபி விபரம், அட்டசத்திவகை, களுவன், சாகாத கால்; வேகாத் தலை; போகாப் புனல், சொக்கிய மருந்து. முன்கூறிய பாவையாட்டு, பாவைத்தொளில் பூசை, களுவன் பூசைமந்திரம், ஆகிருசனஞ்சாலக்கரு, விபரம், மோகன சாலம், நாத வித்தை முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 1455. சுவடி எண்: 743(b)

# அகத்தியர் இந்திரசாலம் ஆயிரத்திருநூறு - குறி சொல்சாலத்திரட்டு--இரண்டாங்காண்டம்

ஏடுகள்: 30. ஏட்டின் நிலைமை: நல்ல நிலை.
பக்கத்திற்கு: 8-9 வரிகள். கி. எண்ணிக்கை: 1200.
அளவு: $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர்- எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

முத்திதரு காண்டத் தொகுதியைப் பாட
முற்கருவி லொருகருவை கூட்டிக் கோநீ
புத்திகொடு சூரிய கிராணம் பார்த்துப்
பருஞ்செடியா மருதூணி காப்புக் கட்டி

**முடிவு :**

பாட்டனென்று நினையாதே குளறு வானைப்
பண்டதெனே பணம்பிடுங்கும் பசியா தென்றுங்
காட்டையிலே யிருநூறு வயித்தி யற்குக்
கைகண்ட வித்தையடா காண்ட முத்தே. 100

இரண்டாங் காண்டம்

முற்றும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், மரண மை, களவுசெய்ய, ஊர் மேஞ்சாதிக்க, வெட்டுந் தலைமீழ்க்க, விநோதவித்தை, பழைய உருவாக, ஆனை, பன்றி, மாடு மேதி, பணவித்தை, பயிரவன், ஏழுக்கு, ஒன்பதுக்கு விடமாத்து திரியாகி ருசனம், குருவின் வித்தை முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1456. சுவடி எண் : 743(c)

# அகத்தியர் இந்திரசாலம்--ஆயிரத்திருநூறு மூன்ருங்காண்டம்

ஏடுகள் : 45. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 8-10 வரிகள். கி. எண்ணிக்கை : 180.
அளவு : $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூரணி புவனை வாலை
பொதிந்தமெஞ் ஞானஞ் சோதி
நாரணி கெவுரி பூத்த
நாயகி யிமைய வெற்பில்
சீரணி பொருளாய் நிற்குஞ்
சிவகுரு விடப்பா கத்தில்

**முடிவு :**

பொய்யென்று நினையாதே நாக மெய்தும்
பூலோக வாதியென்று பொருளும் பெத்து
உய்யென்று நானுரைத்த மூணுங் காண்ட
முத்தசெய்தி இருநூறு முரைத்தேன் முற்றே. 200

குருமுனி துணை
மூணுங்காண்ட முற்றும்

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், விடத்துக்கு, மாதளத்தண்ணீர், சீட்டுவித்தை, தேசி மண்டை, அட்டகர்மம், கருக்கிடை, ஆனை, ஆணை, உந்திவேர், சுரோணிதம், வித்தை, கும்பம், வேதை, எமன் வரவு, விநோதம், மிருக வித்தை, மணி, வயிரவன், ஆலயம், ஞாலம், கற்பமுறை, கற்பம் முதலியன உள்ளன.

---

**வரிசை எண் :** 1457. **சுவடி எண் :** 743(d)

# அகத்தியர் இந்திரசாலம்--ஆயிரத்திருநூறு நாலாங்காண்டம்

ஏடுகள் : 24. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
**பக்கத்திற்கு :** 10 வரிகள். கி. எண்ணிக்கை : 1000.
**அளவு :** $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
**ஆசிரியர் :** அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூரணி நாலாங் காண்டம்
புவிமறை பஞ்ச ணங்கள்
சீரணி திலத மாற்றஞ்
செகவசி யங்கள் வைப்பு

**முடிவு:**

முத்தியாம் நாலில் அஞ்சிட
மொழிந்தேன் பத்தியா யப்பா
—த்துபல தோளி லாட நாலாங்
குருமுனி சாலத் திரட்டு
ஆயிரத் திருநூறும் எழுதி முகிந்தது.
முத்துமிந்த சாத்திரம்
பத்திரப் படுத்தியவனுக்கு தற்கும் 200

குருமுனி துணை

**காலம் :**

இல்லை

**குறிப்பு:**

இதில், வாதகரு, அட்டகற்மம், சத்துரு, பிரிவுகட்டி வைக்க, வசியமாயன்விது, மெழுகு பணவித்தை, முப்பூ வித்தை, மந்திரம் முதலியன உள்ளன.

---

வரிசை எண் : 1458 சுவடிஎண் : 743(e)

# அகத்தியர் இந்திரசாலம்-ஆயிரத்திருநூறு-ஐந்தாங்காண்டம்-சிகவசியம்-இந்திரசாலம்.

ஏடுகள் : 44. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 1700.
அளவு : $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

காண்டமுத்தே

காண்டமடா முன்சொன்ன இந்திர சாலங்
கைவல்லிய மாகவுந்தான் கருவைக் கேளு
பாண்டமடா மலமிருந்த நாவாய்ப் பாண்டம்
பாளாக வுடையுமுன்னே வசியஞ் செய்ய

**முடிவு :**

வாளப்பா ஆறேளில் வகையுஞ் சொன்னேம்
வய்த்திருந்தோர் தமைவணங்கி வாங்கி நீயும்
தாளப்பா வராம லுலக மீதில்
சாத்தினேன் புலத்தியனே அஞ்சாங்காண்ட முற்றே. 203

அஞ்சாங் காண்டம் முற்றும்
தேவி சகாயம்

**காலம்:**

இல்லை

**குறிப்பு :**

இதில், இடுசாமக்கரு, ஆகாசப் பிரளி, சகல பிறிவு' ஆள்க் காட்டி மை, விநோதம், தண்டுயோனியடைய, மாத்து, வாதம், சுபகற்ம அபகற்மம் இரண்டுக்கும் மாரண சக்கரம், சகல சன்னி நோய்க்கு, நொடி வித்தை வயித்தியன் பிழைப்புக்கு, பணவித்தை, துள்ளு வித்தை முதலியன உள்ளன.

---

**வரிசை எண் : 1459** **சுவடி எண்: 743(f)**

# அகத்தியர் இந்திர சாலம்--ஆயிரத்திருநூறு ஆறுங்காண்டம்

ஏடுகள் : 12. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
பக்கத்திற்கு : 8—10 வரிகள். கி. எண்ணிக்கை : 500.
அளவு : $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்:**

உரைத்ததோ ராராங் காண்டந் தன்னை
யுறுதியாய் மனமுடைய சிவயோ கிக்குந்
திரைமறைவா யோகமொடு வாதஞ் சொன்னேந்
திடன்சரிகை கிரிகையது செடத்தைத் தூக்கும்

முடிவு:

மாறுமே அஞ்சாங் காண்டம்
வகைவிபர மதிலே சொன்னோம்
கூறுமே மூணாங் காண்டம்
குலாவிய விநோத வித்தை
நீறுமே முதலாங் காண்டம்
நிகழ்த்தினேன் சூட்ச மெல்லாம்
மாறுமே மாற்ப தற்கு
அகத்திய ஞவான் சொன்னேன். 101

ஆறுங் காண்டம் முற்றும்

காலம்:

இல்லை.

குறிப்பு:

இதில், தேசுங்கு என்ற தலைப்பு மட்டும் உள்ளது மற்ற ஏடுகளின் தலைப்புக்கள் இல்லை.

---

வரிசை எண்: 1460. சுவடி எண்: 743(இ).

# அகத்தியர் இந்திரசாலப்-ஆயிரத்திருநூறு ஏழாங்காண்டம-பரிபாசை.

ஏடுகள்: 11. ஏட்டின் நிலைமை: நல்ல நிலை.
பக்கத்திற்கு: 7-9 வரிகள். கி. எண்ணிக்கை: 450.
அளவு: $30\frac{1}{2} \times 3$ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

பூரணி புவனந் தன்னில்
பொதிகையில் வந்து நாளுந்
சீரணி முருக நந்தி
சிவனுமை யருளும் பெற்றுத்

தாரணி வினோத வித்தை
சாலத்தின் கருக்கள் சொன்னேன்
நாரணி யேழாங் காண்டம்
ஆனைமா முகத்தன் காப்பு

**முடிவு:**

வேறென்ன வுருவே வேறு
விடத்தலை யுருவே மூலம்
பாரென்ன ஏழாங் காண்டம்
படித்திரு மவுன முற்றே. 100

ஏழாங்காண்ட முற்றும்
குருவே துணை

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், எட்டாம் ஏட்டின் பின்புறம் அடைக்கலம் என்ற தலைப்பு மட்டும் உள்ளது. பிற ஏடுகளில் தலைப்புக்கள் இல்லை. முன் சொன்ன ஏழு காண்டங்களிலும் மொத்தம் 1100 தான் உள்ளன 1200 இல்லை. எனவே இதன் எட்டாங் காண்டம் இதில் இல்லை. ஆனால், பின்னர் 'குறுமுனி இந்திரசால வெண்பா' என்ற பகுதி இச்சுவடியில் இருக்கிறது. அது இதன் 743(*i*)–ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

வரிசை எண் : 1461. சுவடி எண் : 743(h)

# சரநூல்

ஏடுகள் : (1+1) 2. ஏட்டின் நிலைமை : நல்லநிலை.
பக்கத்திற்கு : 4-7 வரிகள். கி. எண்ணிக்கை : 30.
அளவு : $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

பிறந்ததொரு விசனமது மெய்பொய்யோ வென்றால்
பலத்ததொரு சூரியனில் மெய்யெனவே சொல்லு
கறந்தபால் சந்திரனில் பொய்யெனவே சொல்லு
கடியதொரு விஷமுண்டோ யில்லையோ வென்றால்

**முடிவு:**

வெள்ளிவெண் டிங்கள் விளங்கு புதனிடம்
வுள்ளிய மந்த னிரவி சனிபலம்
வள்ளல் வியாழம் வளர்பிறை யோனிடம்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், முதல் ஏடு மட்டும் 3 செய்யுட்களுடன் சரநூல் என்றுளது. அடுத்த ஏடு, 'சொற்ண வயிரவன்' என்ற பெயரால் 'அசிய ஸ்ரீ சிதம்பர சம்மேழனம்' எனத் தொடங்கி, 'மூவிமரும் றீம் றீம் உம்படு சுவாகா' என்று முடிகிற ஒரே மந்திரத்துடன் இருக்கிறது.

---

வரிசை எண்: 1462. சுவடி எண்: 743(i)

# குறுமுனி இந்திரசால வெண்பா--நூறு

ஏடுகள்: 12. ஏட்டின் நிலைமை: நல்ல நிலை.
பக்கத்திற்கு: 8-10 வரிகள். கி. எண்ணிக்கை: 500.
அளவு: $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செண்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

**கபிலை நிற முட்டைக் கரு**

கருவகையில் மூலிகைச் சுருக்க மென்று
மொருவிபரம் வெண்பா வுரைக்கவே—திருவளரும்
கந்தனுக்கு முன்னுதித்த காரானை ஐந்துகரத்
தந்திமுகத் தோன்சாலக் காப்பு

**முடிவு:**

குறிவெண்பா விந்திரகண்டி கோகரண நூறு
அறிவுண்டாஞ் சால மடக்கும்—பிறிவுதரு
தெட்சணியைப் பாரு செகச்சால மாட்டிவிக்க
வைச்சநூறு முற்றுமவு னம் 100

சாலவெண்பா நூறு முற்றும்
குழந்தை விநாயகன் துணை
பொதிகைமுனி பாதாரவிந்தமே கதி

**காலம்:**

இல்லை

**குறிப்பு:**

இதில், கபிலைநிற முட்டைக்கரு, பாவை, துரிசு, திலகம், பட்சணிக் கரு, நாதக்கரு, மறைப்பு, தண்டகபட்சணி, நட்டுவக்காலி, பீரங்கி, காடெரிக் கரு, நீலகண்டி, அக்காள், துரிசு, மோடி, பசாசு போக மை, தேவிவர, சறுவபேய் புகைபோட, மாரணக் கரு முதலியன உள்ளன.

இது, அகத்தியர் இந்திரசாலம் ஆயிரத் திருநூற்றின் தொடர்ச்சியோ என்பது ஐயம்.

---

வரிசை எண்: 1463. சுவடி எண்: 743(j)

# சால நிகண்டு--இருநூறு

ஏடுகள்: 21. ஏட்டின் நிலைமை: நல்ல நிலை.
பக்கத்திற்கு: 6-9 வரிகள். கி. எண்ணிக்கை: 800.
அளவு: $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து: தமிழ்.
ஆசிரியர்: அகத்தியர் (?). முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

ஏத்த சால நிகண்டிரு நூறையும்
சாத்த மூவ ரகத்திய ஞமே
பூத்த தாரணி பூபதி நந்தியைக்
காத்தவேள் கணபதி காப்பதே

**முடிவு:**

பாரினி லிந்த முறைப்படி பாத்து
தேறுநீ பாவஞ் செய்யவும் வேண்டாம்
ஆறிநீ பாரு அறுபது நாலு
நேரிரு நூறு நிகண்டிது முத்தே. 200

சால நிகண்டு முற்றும்.

**காலம் :**

இல்லை

**குறிப்பு :**

இதில், நயங்கெடுக, யிடுகரு, வழுதலங்காய், மைவாடை, பொட்டு சிதம்பரம், யோனி விரிய, விலங்கு, தெரிக்க, நித்திரை வர, நாவடக்க, ஆட்டுக்கிடை, எதிரிக்கு, துவாலை எடுக்க, சொரையெடுக்க, சாலத்துக்குக் கரு, சூரணம், தயிலம், தெரிசிங்கி முதலியன உள்ளன.

---

**வரிசை எண் :** 1464. சுவடி எண் : 743(k)

# பூரண சந்திரோதய வாலை

ஏடுகள் : 26. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை.
**பக்கத்திற்கு :** 7-9 வரிகள். கி. எண்ணிக்கை : 1200.
**அளவு :** $30\frac{1}{2} \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர். எழுத்து : தமிழ்.
**ஆசிரியர் :** அறியக்கூடவில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

மூச்சுவிடும் போதிருந்த ரசவா தப்பெண்
மோகன பூரண சந்திரோ தயத்தைப் பாட
ஆச்சரிய மாயிரத் திருநா ருய்ந்து
யரன்சொன்னா ரதிவிந்த யிருநா றுந்தா

**முடிவு :**

வாருரை சந்திர வாலைமெய் நூலை
பேருரை செய்ய பெரியோ ரெனைநாடிச்
சீருரை செய்தொழில் தெவ்வா சித்தி
